# www.Padasalai.Net

படங்களை தொடுக! பாடசாலை வலைதளத்தை சமூக ஊடகங்களில்
பின்தொடர்க!! உடனுக்குடன் புதிய செய்திகளை Notifications-ல் பெறுக!

Zoom Touch Below Links Download!

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **12th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **11th Standard** | Syllabus | Books | Study Materials – EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | Centum Questions | Creative Questions | |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NEET | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **10th Standard** | Syllabus | Books | Study Materials - EM | Study Materials - TM | Practical | Online Test (EM & TM) |
| | Monthly Q&A | Mid Term Q&A | Revision Q&A | PTA Book Q&A | Centum Questions | Creative Questions |
| | Quarterly Exam | Half Yearly Exam | Public Exam | NTSE | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **9th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Quarterly Exam | Half Yearly Exam | Annual Exam | RTE | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **8th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | NMMS | Periodical Test |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **7th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **6th Standard** | Syllabus | Books | Study Materials | 1st Mid Term | 2nd Mid Term | 3rd Mid Term |
| | Term 1 | Term 2 | Term 3 | Periodical Test | SLAS | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **1st to 5th Standard** | Syllabus | Books | Study Materials | Periodical Test | SLAS | |
| | Term 1 | Term 2 | Term 3 | Public Model Q&A | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Exams** | TET | TNPSC | PGTRB | Polytechnic | Police | Computer Instructor |
| | DEO | BEO | LAB Asst | NMMS | RTE | NTSE |


| | | | |
|---|---|---|---|
| **Portal** | Matrimony | Mutual Transfer | Job Portal |

| | | | |
|---|---|---|---|
| **Volunteers** | Centum Team | Creative Team | Key Answer Team |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **Downloads** | LESSON PLAN | Department Exam | Income Tax | Forms & Proposals | Fonts | Downloads |
| | Proceedings | GO's | Regulation Orders | Pay Orders | Panel | |

**Padasalai – Official Android App – Download Here**

**Kindly Send Your Study Materials, Q&A to our Email ID** – Padasalai.net@gmail.com



# ஸ்ரீ கிருஷ்ணா அகாடமி

## 12-ம் வகுப்பு தமிழ் கற்றல் கையேடு

### சிறப்பம்சங்கள்

- அரசுப் பொதுத்தேர்வு விடைக்குறிப்புகள் அடிப்படையில் கற்றல் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.
- மாணவர்கள் விரைவாகக் கற்று அதிக மதிப்பெண் பெறும் வகையில் இவ்விடைக்களஞ்சியம் அமைக்கப்பட்டுள்ளது.
- அரசுப் பொதுத்தேர்வு தேர்வில் கட்டாயமாகக் வினாக்களுக்கு(அகவய வினாக்கள்) விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது.
- கற்பதற்கு எளிய நடையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- புறவய வினாக்கள் மற்றும் அகவய வினாக்கள் விடைக்குறிப்புகளுடன் அமைந்துள்ளது.

CONTACT:9965531727,9443231727

SHRI KRISHNA ACADEMY-NAMAKKAL

| வ. எண் | இயல் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|---|
| 1 | 1 - 8 | மனப்பாடப்பாடல் | 1 - 4 |
| 2 | 1 | ஒரு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA & QR CODE) | 5 - 7 |
| | | இரண்டு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 7 - 9 |
| | | நான்கு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 9 - 12 |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 12 - 17 |
| 3 | 2 | ஒரு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA & QR CODE) | 18 - 20 |
| | | இரண்டு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 20 - 21 |
| | | நான்கு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 21 - 24 |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 24 - 32 |
| 4 | 3 | ஒரு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA & QR CODE) | 33 - 36 |
| | | இரண்டு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 36 - 39 |
| | | நான்கு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 39 - 44 |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் | 44 - 55 |

| | | | |
|---|---|---|---|
| | | (புத்தக வினா, PTA ) | |
| 5 | 4 | ஒரு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA & QR CODE) | 56 - 59 |
| | | இரண்டு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 59 - 61 |
| | | நான்கு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 61 - 64 |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 64 - 70 |
| 6 | 5 | ஒரு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA & QR CODE) | 71 - 74 |
| | | இரண்டு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 74 - 75 |
| | | நான்கு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 75 - 78 |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 79 - 87 |
| 7 | 6 | ஒரு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA & QR CODE) | 88 - 92 |
| | | இரண்டு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 92 - 95 |
| | | நான்கு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 95 - 101 |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 101 - 109 |
| 8 | 7 | ஒரு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA & QR CODE) | 110 - 111 |

| | | | |
|---|---|---|---|
| | | இரண்டு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 112 - 113 |
| | | நான்கு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 113 - 116 |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 116 - 120 |
| 9 | 8 | ஒரு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA & QR CODE) | 121 - 123 |
| | | இரண்டு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 123 - 124 |
| | | நான்கு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 124 - 127 |
| | | ஆறு மதிப்பெண் வினாக்கள் (புத்தக வினா, PTA ) | 127 - 136 |
| 10 | 1 - 8 | இலக்கணப்பகுதி (இலக்கணக்குறிப்பு, பகுபதம், புணர்ச்சி விதிகள்) | 137 - 147 |
| 11 | 1 - 8 | அணி, திணை, துறை | 148 - 155 |
| 12 | | மரபு | 156 - 158 |
| 13 | 1 - 8 | மொழிப்பயிற்சி இரண்டு மதிப்பெண் வினாக்கள் | 159 - 167 |
| 14 | 1 - 8 | PTA வினாக்கள் | 167 - 168 |
| 15 | 1 - 8 | கலைச்சொல் அறிவோம் | 168 - 171 |
| 16 | 1 - 8 | இலக்கிய நயம் பாராட்டல் | 172 - 181 |
| 17 | 1 - 8 | தமிழாக்கம் தருக | 181 - 186 |
| 18 | 1 - 8 | வாழ்க்கை நிகழ்வில் பழமொழி | 186 - 190 |
| 19 | 1 - 8 | எண்ணங்களை எழுத்தாக்குக | 191 - 194 |


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| 20 | 1 - 8 | மொழிப்பயிற்சி<br>நான்கு மதிப்பெண் வினாக்கள் | 195 - 211 |
| 21 | 1 - 8 | சான்றோர் சித்திரம் | 211 - 222 |
| 22 | 1 - 8 | நிற்க அதற்குத் தக | 222 - 226 |
| 23 | 1 - 8 | அறிவை விரிவு செய் | 227 - 228 |
| 24 | 1 | கூடுதல் வினாக்கள்<br>(1, 2, 4, 6 மதிப்பெண் வினாக்கள்) | 229 - 245 |
| 25 | 2 | கூடுதல் வினாக்கள்<br>(1, 2, 4, 6 மதிப்பெண் வினாக்கள்) | 246 - 266 |
| 26 | 3 | கூடுதல் வினாக்கள்<br>(1, 2, 4, 6 மதிப்பெண் வினாக்கள்) | 267 - 297 |
| 27 | 4 | கூடுதல் வினாக்கள்<br>(1, 2, 4, 6 மதிப்பெண் வினாக்கள்) | 298 - 327 |
| 28 | 5 | கூடுதல் வினாக்கள்<br>(1, 2, 4, 6 மதிப்பெண் வினாக்கள்) | 328 - 348 |
| 29 | 6 | கூடுதல் வினாக்கள்<br>(1, 2, 4, 6 மதிப்பெண் வினாக்கள்) | 349 - 380 |
| 30 | 7 | கூடுதல் வினாக்கள்<br>(1, 2, 4, 6 மதிப்பெண் வினாக்கள்) | 381 - 403 |
| 31 | 8 | கூடுதல் வினாக்கள்<br>(1, 2, 4, 6 மதிப்பெண் வினாக்கள்) | 404 - 432 |
| 32 | 1 - 8 | தலைப்பு, ஆசிரியர், கவிதைத்தொகுப்பு(நூல்) | 433 - 434 |
| 33 | 1 - 8 | சொல்லும் பொருளும் | 435 - 439 |
| 34 | 1 - 8 | உரைநடை பாடல்வரி - நூற்பெயர் | 440 - 445 |
| 35 | 1 - 8 | ஆசிரியர் - எழுதிய நூல்கள் | 446 - 449 |
| 36 | 1 - 8 | ஆசிரியர் - பணி, விருது, பட்டம், இதழ்கள் | 450 - 452 |
| 37 | 1 - 8 | ஆண்டுகளும் நூற்றாண்டுகளும் | 453 - 456 |
| 38 | | அரசு பொதுத்தேர்வு மாதிரி வினாத்தாள் | 457 - 460 |

| | | | |
|---|---|---|---|
| 39 | | அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் - மார்ச் 2020 | 461 - 464 |
| 40 | | அரசு பொதுத்தேர்வு விடைக்குறிப்புகள் | 465 - 482 |


Padasalai.Net

# பொதுத்தமிழ் (BLUE PRINT)

| பகுதி | கேள்வி எண் | கேள்விகள் | மதிப்பெண் |
|---|---|---|---|
| I | 1 – 14 | **செய்யுள் :**<br>❖ ஆசிரியர் பெயர்<br>❖ நூல்<br>❖ முக்கிய வரிகள்<br>❖ பாட்டுடைத் தலைவர் } பெயர்கள்<br>❖ பாட்டுடைத்தலைவி<br>❖ கூற்று<br>❖ சொல் - பொருள்<br>❖ பாடல்வரிகள் - திருக்குறள் கண்டறிதல்<br>❖ கவிதை - திருக்குறள் கண்டறிதல்<br>❖ படம் - திருக்குறள் கண்டறிதல்<br>**உரைநடை :**<br>❖ பாடத்தலைப்பு – ஆசிரியர் பெயர்<br>❖ ஆசிரியரின் சிறப்பு<br>❖ பாடப்பகுதிக்குள் வரும் முக்கியவரிகள்<br>❖ கூற்றுகள்<br>❖ நுழையும் முன்<br>❖ பெட்டிச்செய்திகள்<br>**இலக்கணம் :**<br>❖ இலக்கணக் குறிப்பு<br>❖ புணர்ச்சி விதி<br>❖ பாடல் - பாவகை<br>❖ பகுபத உறுப்புகள்<br>**துணைப்பாடம் :**<br>❖ பாடத்தலைப்பு – ஆசிரியர்<br>❖ மையக்கருத்து<br>❖ நுழையும் முன்<br>❖ பெட்டிச் செய்திகள்<br>❖ கதை மாந்தர் பெயர் - கதை<br>**மொழிப்பயிற்சி :**<br>❖ பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுதல்<br>❖ பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குதல்<br>❖ வேர்ச்சொல் - வினைமுற்று<br>❖ வினையெச்சம்<br>❖ பெயரெச்சம்<br>❖ வினையாலணையும் பெயராக மாற்றுதல்<br>❖ கலைச்சொல் - ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்றுதல்<br>❖ மயங்கொலிச் சொற்கள் - பொருள் பொருத்துதல்<br>❖ மரபுத்தொடருக்குப் பொருள் தேர்தல்<br>❖ நிறுத்தற்குறி இடுதல் | 14 x 1 = 14 |

| | | | |
|---|---|---|---|
| II | 15 - 18 | பிரிவு - 1<br>செய்யுள் | 3 x 2 = 6 |
| | 19 - 21 | பிரிவு - 2<br>உரைநடை | 2 x 2 = 4 |
| | 22 - 30 | பிரிவு - 3<br>**இலக்கணம் :**<br>❖ இலக்கண வினாக்கள்<br>❖ பிரித்துப் புணர்ச்சி விதி தருக<br>❖ பகுபத உறுப்பிலக்கணம் தருக.<br>**மொழிப்பயிற்சி :**<br>❖ உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.<br>❖ அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக.<br>❖ மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிக்கவும்<br>❖ மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.<br>❖ புதிர்க்கேற்ற விடையை அறிக<br>❖ வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.<br>❖ பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக<br>❖ தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.<br>❖ சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க<br>❖ பேச்சுவழக்கை எழுத்து வழக்காக மாற்றுக<br>❖ ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.<br>❖ கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத்<br>❖ தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக<br>❖ பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க<br>❖ கீழ்க்காணும் நான்கு சொற்களைக் கொண்டு தொடர் எழுதுக.<br>❖ மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.<br>❖ தொடரில் இடம் பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.<br>❖ பத்தியைப் படித்து தேவையான இடங்களில் நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.<br>❖ விடைக்கேற்ற வினா அமைத்தல் | 7 x 2 = 14 |
| III | 31 – 34 | பிரிவு - 1<br>செய்யுள் | 2 x 4 = 8 |
| | 35 – 38 | பிரிவு - 2<br>உரைநடை | 2 x 4 = 8 |
| | 39 – 43 | பிரிவு - 3<br>மொழித்திறன் பயிற்சிகள் (காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா | 3 x 4 = 12 |

Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| | | ❖ இலக்கிய நயம் பாராட்டல்<br>❖ மொழிபெயர்ப்பு (பழமொழிகள்/பத்தி)<br>❖ அணி இலக்கணம்<br>❖ திணை அல்லது துறை விளக்கம்<br>❖ பத்தி வினா விடை<br>❖ பழமொழிக்கேற்ற வாழ்க்கை விளக்கம்<br>❖ சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் எழுதிப் பொருளை அறிந்து தொடரமைக்க.<br>❖ பத்தியைப் படித்து வினாக்களை உருவாக்குதல்<br>❖ கட்டுரை எழுதுதல்<br>❖ அழைப்பிதழை பத்தியாக மாற்றுதல்<br>❖ கடிதம் எழுதுதல்<br>❖ கவிதையைப் படித்து விழிப்புணர்வு உரை எழுதுதல்<br>❖ கவிதை எழுதுதல்<br>❖ அறிவிப்புப் பலகை செய்தியை உருவாக்குதல்<br>❖ பட்டிமன்றம் எழுதுதல்<br>❖ மறைந்திருக்கும் சொல்லைக் கண்டறிதல்<br>❖ கருத்துப் படத்தைப் புரிந்துகொண்டு பத்தியாக எழுதுதல்<br>❖ கதையைத் தொடர்ந்து நிறைவு செய்க<br>❖ கீழ்க்காணும் விளம்பரத்தைப் படித்து நாளிதழ்ச் செய்தியாக மாற்றுக.<br>❖ விண்ணப்பத்தை நிரப்புக.<br>❖ கதையைப் படித்துப் பொருளுணர்ந்து நிகழ்வை உரையாடலாய் மாற்றுக.<br>❖ உரை எழுதுவோம்<br>❖ குறுக்கெழுத்துப்புதிர்<br>❖ எண்ணங்களை எழுத்தாக்குக. | |
| **IV** | **44 - 46** | **அ) செய்யுள் வினா**<br>**(அல்லது)**<br>**ஆ) செய்யுள் வினா**<br>**அ) உரைநடை வினா**<br>**(அல்லது)**<br>**ஆ) உரைநடை வினா**<br>**துணைப்பாட வினா :**<br>❖ நாடக வடிவம்<br>❖ கதையும் கருப்பொருளும் சிதையாமல் சுருக்குதல் | **3 x 6 = 18** |
| **V** | **47** அ) | பாடல் : | **4 + 2 = 6** |
| | ஆ) | ----- **தொடங்கும் அல்லது முடியும் குறள்** | |

# மாநில அளவில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெற்றவர்களின் காவிய வரிகள்

- கால அட்டவணைப்படி படிப்பது என் பழக்கம்
- அன்றைய பாடங்களை அன்றே படித்து விடுவேன்.
- **ஒரு மதிப்பெண் வினாக்களுக்கான விடையை விரல் நுனியில் வைத்திருப்பேன்.**
- பள்ளியில் நடைபெறும் UNIT TEST, HALF TEST, FULL TEST எல்லாவற்றையும் தவறாமல் எழுதுவேன்.
- முக்கியமான கருத்துக்களை தனியாக ஒரு குறிப்பேட்டில் குறித்துக்கொள்வேன்.
- குறிக்கோள் இருத்தல் வேண்டும்
- விடைகள்அடித்தல் திருத்தல் இல்லாமல் தெளிவாக எழுதுவேன்.
- கேள்வி எண் வரிசைகளின் படி பதிலை எழுதுவேன்.
- ப்ளு பிரிண்ட (Blue Print) எனக்கு மிகவும் உதவியாக இருந்தது.
- **ஒவ்வொரு மதிப்பெண்ணும் ஒரு கிராம் தங்கம் போன்றது.**
- வெற்றி தோல்வி அனைத்திற்கும் நாம்தான் பொறுப்பு.
- எந்தப் பாடத்தையும் பிறகு படித்துக் கொள்ளலாம் என்று ஒத்திப்போடவே மாட்டேன்.
- தொலைக்காட்சி பார்ப்பதை தவிர்த்து விடுவேன்.
- **சாதிக்க வேண்டும் என்ற வெறி கனல் போல் இருக்கவேண்டும்.**
- ஒவ்வொரு வரியையும் படித்தேன்.
- நோ டென்ஷன்
- **படிப்பு விஷயத்தில் ஆசிரியர்களை நான் நன்கு பயன்படுத்திக் கொண்டேன்.**
- மனம் தளரமாட்டேன்.
- படிக்கப் படிக்கத்தான் மனதில் பதியும் என்பது எனக்குத் தெரியும்.

## இவையனைத்தும் நிரூபிக்கப்பட்ட உண்மை!!! முயன்றுப்பாருங்கள்!!!

## கண்டிப்பாக மாநில அளவில் வெற்றி பெறும்போது இந்த காவிய வரிகளின் வலிமை உங்களுக்கு நினைவுக்கு வரும்.

# இயல் 1
# உயிரினும் ஓம்பப் படும் - மொழி

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக. (புத்தக ஒரு மதிப்பெண் வினாக்கள்)

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   **இ) தொல்காப்பியம்** ஈ) நன்னூல்
2. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
   உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது
   அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி
   இ) ங மட்டும் சரி **ஈ) க,ங இரண்டும் சரி**
3. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
   தன்னேர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம் **(PTA - 1)**
   அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை
   **இ) அடிஎதுகை, சீர்மோனை** ஈ) சீர்எதுகை, அடிமோனை
4. **கருத்து 1** : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு
   **கருத்து 2** : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது. **(PTA - 5)**
   அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
   **இ) இரண்டு கருத்தும் சரி** ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
5. **பொருத்துக (PTA - 2)**

| | | |
|---|---|---|
| அ) தமிழ் அழகியல் | - | 1) பரலி சு.நெல்லையப்பர் |
| ஆ) நிலவுப்பூ | - | 2) தி.சு. நடராசன் |
| இ) கிடை | - | 3) சிற்பி. பாலசுப்பிரமணியம் |
| ஈ) உய்யும் வழி | - | 4) கி. ராஜநாராயணன் |

   அ) 4, 3 2, 1 ஆ) 1, 4, 2, 3
   இ) 2, 4, 1, 3 **ஈ) 2, 3, 4, 1**

### இலக்கணத் தேர்ச்சிகொள் (புத்தக ஒரு மதிப்பெண் வினாக்கள்)

1. பிழையான தொடரைக் கண்டறிக. **(PTA - 2,6)**
   அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.
   ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.
   **இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**
   ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.
2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.
   **அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**
   ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது.
   இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.
   ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

SHRI KRISHNA ACADEMY


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## PTA - ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது – என்று கடிதம் எழுதியவர் **(PTA - 1)**
   அ) நெல்லையப்பர் **ஆ) பாரதியார்** இ) வாணிதாசன் ஈ) பாரதிதாசன்
2. தமிழில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் **(PTA - 1)**
   **அ) தொல்காப்பியம்** ஆ) புறப்பொருள் வெண்பாமாலை
   இ) தொன்னூல் விளக்கம் ஈ) நன்னூல்
3. பொருந்தாத சொல்லை அறிக.
   அ) உறுப்பினர் ஆ) குழுவினர் **இ) இயக்குனர்** ஈ) ஊரினர்
4. உயிரெழுத்துக்கள் ________வகைப்படும். **(PTA - 2)**
   அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு **ஈ) இரண்டு**
5. பாரதியார், எங்கிருந்து பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதினார்? **(PTA - 3)**
   **அ) புதுச்சேரி** ஆ) எட்டயபுரம் இ) கடையம் ஈ) சென்னை
6. வியந்து – பகுபத பிரிப்பு முறை தேர்க. **(PTA - 3)**
   அ) விய + த் + த் + உ **ஆ) விய + த்(ந்) + த் + உ**
   இ) விய + ந் + த் + உ ஈ) விய + த் + உ
7. வானமெல்லாம் - என்னும் சொல்லின் புணர்ச்சி விதி **(PTA - 4)**
   **அ) உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே**
   ஆ) ஈறுபோதல் தன் ஒற்று இரட்டல்
   இ) மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்
   ஈ) தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்
8. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் **(PTA - 4)**
   அ) ஒளிப்பறவை **ஆ) ஒரு கிராமத்து நதி**
   இ) சூரியநிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி
9. தமிழ்க்குயில் எவ்வாறு வர வேண்டும்? **(PTA - 6)**
   அ) பாடி ஆ) சீறி **இ) கூவி** ஈ) ஆடி

## QR CODE - ஒரு மதிப்பெண் வினாக்கள்

1. இலக்கியத்தின் நோக்கம் குறித்து மிகவும் தெளிவாகச் சுட்டிக்காட்டும் இலக்கண நூல்
   அ)நன்னூல் ஆ)தண்டியலங்காரம் **இ)தொல்காப்பியம்** ஈ) இலக்கண விளக்கம்
2. வேறுபாடான ஒன்றை தேர்க.
   அ) ஒளிப்பறவை **ஆ)அலையும் சுவடும்** இ) சர்ப்பயாகம் ஈ)சூரிய நிழல்
3. 'யாமும் பாரியும் உளமே' –அடிக்கோடிட்ட சொல் குறிக்கும் புலவர்
   அ)ஔவையார் ஆ)பரணர் இ)நக்கீரர் **ஈ) கபிலர்**
4. 'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் பாடல் (செய்யுள்) இடம்பெற்றுள்ள நூல்
   **அ)புறநானூறு** ஆ)கலித்தொகை இ)அகநானூறு ஈ) பதிற்றுப்பத்து
5. 'பாரதி கடிதங்கள்' என்னும் நூலைப் பதிப்பித்தவர்
   அ) இளசைமணி ஆ) சு.நெல்லையப்பர் **இ)ரா.அ.பத்மநாபன்** ஈ) பெ.சு.மணி
6. எட்டையபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிசேகரிசாமி தீட்சிதர் எழுதிய நூல்
   அ) தரும தீபிகை **ஆ) வம்சமணி தீபிகை**
   இ) பிரபந்த தீபிகை ஈ) அனுபவாநந்த தீபிகை
7. கீழ்வருவனவற்றுள் அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
SHRI KRISHNA ACADEMY

அ) முத்து வீரியம் ஆ) வீர சோழியம்
இ) இலக்கண விளக்கம் **ஈ) தண்டியலங்காரம்**

8. 'ஈறுபோதல்' என்ற ஒரு விதியில் மட்டும் புணரும் பண்புத்தொகைச் சொல்
**அ) செம்பரிதி** ஆ) செந்நிறம் இ) செந்தமிழ் ஈ) வெங்கதிர்

9. 'இளந்தமிழே' என்னும் தலைப்பில் அமைந்த மொழிவாழ்த்துப் பாடல் இடம்பெற்ற நூல்
அ) ஒளிப்பறவை **ஆ) நிலவுப் பூ** இ) சூரிய நிழல் ஈ) பூஜ்யங்களின் சங்கிலி

10. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன. இதனையே --------- என்கிறோம்
அ) இலக்கியத் தனம் ஆ) கலை முழுமை **இ)ஒலிப்பின்னல்** ஈ) தொகை நிலை

## குறுவினாக்கள் (புத்தக இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

**1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.**

**நடை அழகியல் பற்றித் தொல்காப்பியத்தின் கருத்துகள்:**

- **'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26)** என்றும்
- **'நடைநவின்றொழுகும்' (செய்.135)** என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
- மேலும், **ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை**
  **வெண்பா நடைத்தே கலி (செய்.107)** என்றும் சொல்லுகிறது.
- நடை என்ற சொல், தெளிவான பார்வையோடு இங்கு இடம்பெறுகின்றது.
- மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன.
- மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.
- கவிதையின் இயங்காற்றல் தான் நடை. தொல்காப்பியங்களும் பிற இலக்கணங்களும் அவ்வாறே கருதுகின்றன.

**2. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக" - இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.**

**ஓசை நயமிக்க சொற்கள்:**

- படாஅம், கெடாஅ, கடாஅ, பேக, நல்லிசை, ஈத்த

**இலக்கணக் குறிப்புகள்:**

- படாஅம் - செய்யுளிசை(இசைநிறை) அளபெடை
- கெடாஅ - செய்யுளிசை(இசைநிறை) அளபெடை
- கடாஅ - செய்யுளிசை(இசைநிறை) அளபெடை
- ஈத்த - பெயரெச்சம்
- நல்லிசை - பண்புத்தொகை
- பேக - அண்மை விளிச்சொல்

**3. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

- சிவந்த நிறத்தை உடைய கதிரவன் மலையின் பின்னே மாலை நேரத்தில் மறைவான்.
- அப்போது வானம் சிவந்த பூக்காடு போன்று காட்சியளிக்கும்.
- அது போல, உழைக்கும் உழைப்பாளர்களின் கரங்கள் சிவந்து துன்பத்தை அடைய, தொழிலாளர்களின் வியர்வையாகிய வெள்ளம் பருத்த தோள்கள் மீது முத்துக்களைப் போல் அமர்ந்திருக்கும்.
- இத்தகைய சிறப்பை எல்லாம் வியந்து பாட எனக்கு உன்னை விட்டால் வேறு சரியான துணை உண்டோ என்று சிற்பி தமிழின் துணை வேண்டும் என்கிறார்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
SHRI KRISHNA ACADEMY

4. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**
   - ❖ பூத்துக் குலுங்கும் பூக்களின் மணத்திலும் பறவைகளின் ஒலிகளிலும் **விடியலின்** வெளிச்சமாக உதிக்கும் கதிரவனின் தோற்றம் இயற்கையின் **வனப்பை** எடுத்துரைக்கிறது.

**(அல்லது)**

   - ❖ சூரியன் தோன்றும் **விடியலில்** இயற்கையின் **வனப்பைக்** கண்டேன்.

## இலக்கணத்தேர்ச்சி கொள்

## குறுவினாக்கள் (புத்தக இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணரத்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

**முடிந்தால் தரலாம்: - இயன்றால் தரலாம்**

   - ❖ உன்னிடம் உள்ள பொருள்களைக் கொண்டு ஏழைகளுக்கு உதவ **முடிந்தால் தரலாம்.**

**முடித்தால் தரலாம்: - நிறைவு செய்த பின் தரலாம்.**

   - ❖ வீட்டின் திறவுகோலை வேலைகளை **முடித்தால் தரலாம்.**

2. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**
   - ❖ மொழியின் இயல்பை உணர்த்தும் இலக்கண விதிகளை அறிந்தும் கவனத்துடன் எழுதினால் பிழைகளைத் தவிர்க்க முடியும்.
   - ❖ சிறிதளவு முயற்சியும் பயிற்சியும் தவறில்லாமல் எழுதத் துணை புரியும்.
   - ❖ எழுத்துகள் சொல்லில் வரும் இடம்(முதல், இடை,கடை), வரிவடிவ வேறுபாடு அறிதல் வேண்டும்.
   - ❖ எல்லா இடங்களிலும் பேச்சுத் தமிழை எழுத முடியாது. பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதே எழுத்துப் பிழைக்கு முதன்மையான காரணம்.
   - ❖ எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும்
   - ❖ ந,ண,ன / ல,ள,ழ / ற,ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து ஒலிக்க வேண்டும்.
   - ❖ தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும் அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.
   - ❖ தொடக்கத்தில் சிலகாலம் வாய்விட்டோ அல்லது மனத்துக்குள் உச்சரித்தபடியோ எழுதப்பழகுவது நல்லது.
   - ❖ வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிகோலும். எனவே நிதானமாக எழுதுவது நல்லது.
   - ❖ கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும்.

## PTA - இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. **சிற்பி பாலசுப்பிரமணியம் குறிப்பு வரைக. (PTA - 1)**
   - ❖ கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர் சிற்பி பாலசுப்பிரமணியம்.
   - ❖ பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.
   - ❖ மொழிபெயர்ப்புக்காகவும் ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
   - ❖ இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர்.
- இலக்கியச்சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.
- மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் மொழிபெயர்த்துள்ளார்.
- சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.

2. **எழுதும்போது ஏற்படும் பிழைகளை வகைப்படுத்துக. (PTA - 1)**

எழுதும்போது ஏற்படும் பிழை நான்கு வகைப்படும் அவை,

- எழுத்துப்பிழை
- சொற்பொருட்பிழை
- சொற்றொடர்ப்பிழை
- பொதுவான பிழைகள் சில

3. **தமிழ் எத்தகைய வலிமை வாய்ந்தது? (PTA - 3)**

- வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது தமிழ்.
- நிலத்தினும் பெரிது, வானினும் உயர்ந்தன்று, கடலினும் ஆழமானது என்றெல்லாம் தமிழின் பரப்பையும் விரிவையும் ஆழத்தையும் புலவர் போற்றுவர்.

4. **“முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்!” – யார், யாரைப் பற்றி கூறியது? (PTA - 5)**

- சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழன்னையைப் பற்றிக் கூறியது ஆகும்.

5. **தமிழ் மொழியின் சிறப்புகளாக நீவிர் அறிவன யாவை? (PTA - 6)**

- தமிழ்மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீட்சி; தோன்றிய காலந் தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது.
- இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் விளங்குகிறது.
- அத்தகைய தமிழின் பெருமையைப் பேசாத மரபுக் கவிஞர்கள் இலர் எனலாம்.
- தமிழ் பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு பழஞ்சிறப்பைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பது கவிஞரின் அவா.

## சிறுவினாக்கள் (புத்தக நான்கு மதிப்பெண் வினாக்கள்)

1. **சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக. (PTA - 2)**

**மொழியின் தோற்றம்:**

- எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.
- மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.

**ஒலிப்பின்னல்:**

- இதனையே அந்தப் பனுவலின் பாடலின் - ஒலிப்பின்னல் (sound texture) என்கிறோம்.

எடுத்துக்காட்டாக ஒரு பாடல் :

**கடந்தடு தானை மூவிருங்கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;**
**முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;**
**முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;**
**யாமும் பாரியும் உளமே;**
**குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே** (புறம்.110)

SHRI KRISHNA ACADEMY


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

என்னும் இப்பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகிற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள், பிற மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருதலை அறிந்துகொள்ளலாம்.

**ஒலிகளும் சொற்களும் திரும்ப வரல்:**

❖ இன்னும் சில பாடல் அடிகளை இங்கே இதனடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்து ஒலிக்கோலத்தின் வலிமையை அறிந்துகொள்ளலாம்.

❖ சிறுசிறு வாக்கியங்கள், பேசுவோரின் அறுதியிட்டுப் பேசும் தன்மையைக் காட்டுகின்றன.

**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக (புறம்.145)**

**புணரின் புணராது பொருளே; பொருள்வயின்**
**பிரியின் புணராது புணர்வே (நற்.16)**

**நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை (புறம்.290)**

இப்படிப் பல. உயிர் ஒலிகள் - குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியமான ஒரு பண்பு ஆகும்.

2. **'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

**காட்சி நயம்:**

**செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்:**

❖ சிவந்த சூரியன் மாலைப் பொழுதில் மேற்குத்திசையில் மறைதல் என்பது இயல்பான நிகழ்வு.

❖ இதனைக் கவிஞர், செம்மைமிகு சூரியன் மாலை வேளையில் மலைமுகடுகளில் தனது தலையைச் சாய்க்கிறான் என்று நயம்படக் கூறியுள்ளார்.

**செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்:**

❖ சூரியன் மேற்குத்திசையில் மறையும் போது சூரிய ஒளி வானமெங்கும் பரவிக் காணப்படுவது ஒரு இயல்பான நிகழ்வு

❖ இதனைச் சிற்பி பாலசுப்பிரமணியம் சூரியனின் ஒளிக்கற்றைகள் வானம் முழுவதும் பரவி செந்நிறப் பூக்காடு போலத் தோற்றமளிக்கிறது என்று நயம்படக் காட்டுகிறார்.

3. **'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ் சுட்டிப் பொருள் விளக்குக. (PTA - 1,3)**

**இடம் :**

தண்டி என்பவரால் எழுதப்பட்ட தண்டியலங்காரம் என்னும் நூலில் தன்னேர் இலாத தமிழ் - தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல் பொருளணியியல் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

**பொருள்:**

ஒலிக்கின்ற நீர் நிறைந்த கடலால் சூழப்பட்ட இந்த உலகத்தின் புற இருளை அகற்றும் என்பது இவ்வடியின் பொருளாகும்.

**விளக்கம் :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

4. **பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
SHRI KRISHNA ACADEMY

| | |
|---|---|
| **பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே. - நன்னூல்** | **மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா,வா! -சிற்பி பாலசுப்பிரமணியம்** |
| நன்னூலில் பழையன விடுத்துப் புதியன படைப்பதைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. | சிற்பி. பாலசுப்பிரமணியம் பாடலிலும் பழமைமிகு செயல்பாடுகளுக்குப் புதிய வடிவம் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. |
| காலத்தால் மொழிப்புலத்தில் மாற்றம் தேவைப்படும் இடங்களில் பழைய சொற்களைக் களைந்து புதிய புதிய சொற்களை மொழிக்கும் பண்பாட்டிற்கும் ஏற்றவாறு திருத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். | ❖ மொழிக்குப் பெருமை சேர்க்கவும் தமிழ்த்தாயின் பழமைமிகு செயல்பாடுகளுக்குப் புதிய வடிவம் கொடுக்கவும் உடல் சிலிர்க்கும் படி தமிழாகிய குயிலே வா! பாடி வா! |

## PTA - நான்கு மதிப்பெண் வினாக்கள்

1. **கவிதையின் நடையைக் கட்டமைக்கும் நோக்கில் அழகியல் கூறுகளில் சொற்புலம் பற்றி எழுதுக. (PTA - 1)**

❖ சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.
❖ கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.
❖ சொல்வளம் என்பது, ஒரு பொருள் குறித்து வரும் பல சொல்லாய்ப் பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லாய் வருதலும் பல துறைகளுக்கும் பல சூழல்களுக்கும் பல புனைவுகளுக்கும் உரியதாய் வருதலும் உணர்வும் தெளிவும் கொண்டதாய் வருதலும் என்று செழிப்பான தளத்தின் சொல், விளைச்சல் கண்டிருப்பதைக் குறிப்பது ஆகும்.
❖ சங்க இலக்கியத்தில் இது மலர்ந்தும் கனிந்தும் கிடக்கிறது.

**சான்று:**

❖ முல்லைக்கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.
❖ கி.ராஜநாராயணன் ‘கிடை’ என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்.

2. **கலை முழுமை என்பதை விளக்குக. (PTA - 3)**

❖ தொல்காப்பியம் மிகவும் தெளிவாக, இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. இத்தகையதொரு முழுமைதான் கலைமுழுமை எனப்படுகிறது.

3. **கவிதை மறுதலைத்தொடரைச் சான்றுடன் விளக்குக. (PTA - 6)**

❖ தமிழ் மொழியில் உரைநடை வழக்கு, பேச்சுவழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது, எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால் சங்கப்பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து வருகிறது. கவிதை மறுதலைத் தொடர் இது.
❖ சிறப்பாக முடியும் பாடல்களின் இறுதியில்தான் இந்தத் தொடரியல் பிறழ்வுநிலை பெரிதும் காணப்படுகிறது. சான்றாக,
❖ பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச்சடங்கு பற்றிய பாடல்

**“இடுக வொன்றோ, சுடுகவொன்றோ;**
**படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே. (புறம்.239)**

❖ இந்த இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது. ஏனைய 20 அடிகளில், தொடர்கள் வரிசையாகவும் திட்டமிட்டு நேர்படவும் செல்லுகின்றன.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- **'தொடியுடைய தோள் மணந்தனன்'** எனத் தொடங்கி, ஒவ்வோர் அடியும் தனித்தனியே வினைமுற்றுகளோடு, தன்னிறைவோடு முடிகின்றன.
- இப்படி 18 பண்புகளை வரிசைப்படுத்திய பிறகு, தொகுத்துச் சொல்வது போல **'ஆங்குச் செய்பவெல்லாம் செய்தனன் ஆதலின்'** எனக் கூறிவிட்டுப் போடா போ, - புதைத்தால் புதை சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறது. பாடலின் தொடரியல் சார்ந்த வடிவமைப்பு இதற்குத் துணை நிற்கிறது.

## நெடுவினாக்கள் (புத்தக ஆறு மதிப்பெண் வினாக்கள்)

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. (PTA - 5)**

**கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகள்:**

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| * | முன்னுரை |
| * | நடையியல் - விளக்கம் |
| * | ஒலிக்கோலங்கள் |
| * | சொற்புலம் |
| * | தொகைநிலை |
| * | தொடரியல் போக்குகள் |
| * | மறுதலைத்தொடர் |
| * | முடிவுரை |

**முன்னுரை:**

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவையாகும். அவற்றைப்பற்றி இங்குக் காண்போம்.

**நடையியல் : விளக்கம்**

- மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும் அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன. மொழிக்குள் இருக்கும் ஒரு வலிமைமிக்க ஆற்றல் கவிதைக்காக, இலக்கியத்துக்காகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. கவிதையின் இயங்காற்றல்தான் நடை. தொல்காப்பியமும் பிற இலக்கணங்களும் அவ்வாறே கருதுகின்றன.
- **'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26)** என்றும்
- **'நடைநவின்றொழுகும்' (செ.135)** என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
- மேலும், **ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி (செய்.107)** என்றும் சொல்லுகிறது.
- நடை என்ற சொல், தெளிவான பார்வையோடு இங்கு இடம்பெறுகின்றது.

**ஒலிக்கோலங்கள் :**

- எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது.
- மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.
- இதனையே அந்தப் பனுவலின் பாடலின் - ஒலிப்பின்னல் (sound texture) என்கிறோம்.



SHRI KRISHNA ACADEMY

**எடுத்துக்காட்டாக ஒரு பாடல் :**

**கடந்தடு தானை மூவிருங்கூடி**
**உடன்றனிர் ஆயினும் பறம்பு கொளற்கரிதே;**
**முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு;**
**முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்;**
**யாமும் பாரியும் உளமே;**
**குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே (புறம்.110)**

என்னும் இப்பாடலில் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகிற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள், பிற மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருதலை அறிந்துகொள்ளலாம்.

- ❖ இன்னும் சில பாடல் அடிகளை இங்கே இதனடிப்படையில் ஒப்பிட்டுப் பார்த்து ஒலிக்கோலத்தின் வலிமையை அறிந்துகொள்ளலாம்.
- ❖ சிறுசிறு வாக்கியங்கள், பேசுவோரின் அறுதியிட்டுப் பேசும் தன்மையைக் காட்டுகின்றன.

**படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்**
**கடாஅ யானைக் கலிமான் பேக (புறம்.145)**

**புணரின் புணராது பொருளே; பொருள்வயின்**
**பிரியின் புணராது புணர்வே (நற்.16)**

**நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை (புறம்.290)**

இப்படிப் பல. உயிர் ஒலிகள் - குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப்பாடல்களில் முக்கியமான ஒரு பண்பு.

**சொற்புலம்:**

- ❖ சொல்வளம் என்பது ஒருபொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் பலதுறை, பலசூழல், பலபுனைவுகளுக்கும் உரியதாய் வருதலும், உணர்வும், தெளிவும் கொண்டதாய் வருதலும், என்றவாறு செழிப்பான தளத்தில் சொற்கள் விளைச்சல் கொண்டிருப்பதைக் குறிக்கும்.
- ❖ சான்றாக முல்லைக்கலியில் காளைகளில் பல இனங்களைக் காட்டுகின்ற சொற்கள் உள்ளன. சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளம். சொல்வளம் என்பது தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதையும் குறிக்கும்.

**தொகைநிலை:**

- ❖ சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு இது. இதனைத் தொகைநிலை என்று தொல்காப்பிய எச்சவியல் பேசுகிறது.
- ❖ தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு. அது வாக்கிய அமைப்பில் ஒரு சொல் போலவே நடைபெறும்.
- ❖ சான்றாக வைகுறுவிடியல், கவினுறு வனப்பு என்பன.

**தொடரியல் போக்குகள்:**

- ❖ ஒலிக்கோலமும், சொற்புலமும், சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்தி கட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது.
- ❖ பரிமாறப்படும் உணர்வுகளுக்கும் செய்திகளுக்கும் ஏற்பத் தொடர்கள் ஏறியும் இறங்கியும் திரும்பியும் சுழன்றும் இயங்குகின்றன.

**மறுதலைத் தொடர்:**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- உரைநடை வழக்கு, பேச்சுவழக்கு உள்ளிட்ட இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது, எழுவாய் + செயப்படுபொருள் அல்லது பிறவற்றுடன் கூடிய அமைப்பு + பயனிலை என்று வருவதே மரபு. ஆனால் சங்கப்பாடல்கள் பலவற்றில் இது பிறழ்ந்து வருகிறது. கவிதை மறுதலைத் தொடர் இது.
- சான்று: பேரெயின் முறுவலார், நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச்சடங்கு பற்றிய பாடல்

  **"இடுக வொன்றோ, சுடுகவொன்றோ**
  **படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே. (புறம்.239)**

- இந்த இறுதி அடி ஓர் எளிமையான தொடரியல் பிறழ்வோடு அமைந்திருக்கிறது. ஏனைய 20 அடிகளில், தொடர்கள் வரிசையாகவும் திட்டமிட்டு நேர்படவும் செல்லுகின்றன.
- **'தொடியுடைய தோள் மணந்தனன்'** எனத் தொடங்கி, ஒவ்வோர் அடியும் தனித்தனியே வினைமுற்றுகளோடு, தன்னிறைவோடு முடிகின்றன.
- இப்படி 18 பண்புகளை வரிசைப்படுத்திய பிறகு, தொகுத்துச் சொல்வது போல **'ஆங்குச் செய்பவெல்லாம் செய்தனன் ஆதலின்'** எனக் கூறிவிட்டுப் போடா போ, - புதைத்தால் புதை சுட்டால் சுடு என்று அலுத்துக் கொள்கிறது. பாடலின் தொடரியல் சார்ந்த வடிவமைப்பு இதற்குத் துணை நிற்கிறது.

**முடிவுரை:**

நடையியல் வடிவமைப்பின் பகுதிகளையும் முழுமையினையும் சார்ந்தே இருக்கிறது. அத்தகைய தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம் ஆகும்.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**பாரதியின் கடிதம் வாயிலாக நாம் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று :-**

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| ➢ | முன்னுரை |
| ➢ | மொழிப்பற்று |
| | ❖ தமிழ்மொழிக்கு நன்மை |
| | ❖ பாரதியின் வேண்டுகோள் |
| | ❖ பாரதியின் ஏக்கமும் வேண்டுகோளும் |
| ➢ | சமூகப்பற்று |
| | ❖ தமிழ்நாடு |
| | ❖ ஆணும் பெண்ணும் சமம் |
| | ❖ தொழில்கள் பெருக |
| ➢ | முடிவுரை |

**முன்னுரை:**

**"சித்தரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்"**

உறவுக்கு, அறிவுறுத்தலுக்கு, வேண்டுதலுக்கு, வணிகத்திற்கு என்று கடிதங்கள் எழுதுகையில் அவற்றின் மொழியாட்சி மாறுபடுகிறது. பாரதி கூட தன் நெருங்கியவர்களுக்குக் கடிதத்தின் வாயிலாகப் பல கருத்துகளை எடுத்துக் கூறுகிறார். இவ்வாறு நெல்லையப்பருக்குப் பாரதி எழுதிய கடிதத்தின் வாயிலாக அவரது மொழிப்பற்று, சமூகப்பற்றுப் போன்றவற்றைக் காணலாம்.

**மொழிப்பற்று :**

**தமிழ்மொழிக்கு நன்மை:**

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவது எங்கும் காணோம்"**



SHRI KRISHNA ACADEMY

ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு மொழிகள் தெரிந்திருந்து, அந்த மொழிப் பத்திரிக்கைகள் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன என்பதை நேரிடத் தெரிந்து கொள்ள முடியுமானால் - தமிழ்நாட்டிற்கு எத்தனை நன்மை உண்டாகும்.

**பாரதியின் வேண்டுகோள்:**

**"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"**

தமிழ், தமிழ், தமிழ் - என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்ள வேண்டும். புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் - தமிழில் ஏறிக்கொண்டே போக வேண்டும்.

**பாரதியின் ஏக்கமும் வேண்டுகோளும்:**

**"எட்டுத்திக்கும் செல்வீர் அங்குள்ள நூல்களை**
**நல்ல தமிழில் மொழிபெயர்ப்பீர்"**

உள்ளமே உலகம்! ஏறு! ஏறு! ஏறு! மேலே! மேலே! மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக்கொண்டு பிழைக்க முயற்சி செய்யும் பழங்காலத்து மூடர்களைக் கண்டு குடல் குலுங்கச் சிரி. உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ. பற! பற! – மேலே! மேலே! மேலே! என்று பாரதியார் மொழியைச் சிறப்பிக்கிறார்.

**சமூகப் பற்று :**

**தமிழ்நாடு :**

**"வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"**

தமிழ்நாடு வாழ்க, தமிழ்நாட்டில் நோய்கள் தீர்க, தமிழ்நாட்டில் வீதிதோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் மலிக, அந்தத் தமிழ்ப்பள்ளிக் கூடங்களிலே நவீன கலைகளெல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்றெல்லாம் எழுது என்று பாரதியார் கூறுகிறார்.

**ஆணும் பெண்ணும் சமம் :**

**"மங்கையராய்ப் பிறப்பதற்கே - நல்ல**
**மாதவம் செய்திடல் வேண்டுமம்மா!"**

ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள், அவை ஒன்றிலொன்று தாழ்வில்லை, பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான், பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெல்லாம் எழுது என்று பாரதியார் கூறுகிறார்.

**தொழில்கள் பெருக :**

**"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்**
**ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்"**

தொழில்கள், தொழில்கள் என்று ஓசை எழுப்புங்கள்; வியாபாரம் வளர்க, இயந்திரங்கள் பெருகுக, முயற்சிகள் ஓங்குக, சங்கீதம், சிற்பம், இயந்திரநூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ்நாட்டிலே பெருகிடுக என்று முழங்கு. சக்தி! சக்தி! சக்தி! என்று பாடு என்று சமூகப் பற்று குறித்துப் பாரதியார் கூறுகிறார்.

**முடிவுரை:**

**"நாளைய சமுதாயம் இளைஞர் கையில்"**

பாரதியின் கனவு நனவாகும் வகையில் ஒவ்வொரு குடிமகனும் மொழிப்பற்றும், சமூகப்பற்றும் கொண்ட நல் உணர்வினை மேம்படுத்த சுயநலத்தைக் கைவிட்டுப் பொதுநலச் சிந்தனை வளர அரும்பாடு பட வேண்டும். அப்பொழுதுதான் நம் நாடு மொழியாலும் சமூக உணர்வாலும் உயர்ந்து நிற்கும்.

3. **தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் கூறுவன:**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
SHRI KRISHNA ACADEMY

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| * | முன்னுரை |
| * | வேறு துணை உண்டோ? |
| * | பொதிகைத் தென்தமிழ் |
| * | சங்கத் தமிழே வா! |
| * | முடிவுரை |

**முன்னுரை:**

**"எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!"**

தமிழ்மொழி நம் அடையாளம்; பண்பாட்டின் நீளம்; காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது. அத்தகைய தமிழின் பெருமையைப் பேசாத மரபுக் கவிஞர்கள் இலர் எனலாம். இத்தகைய சிறந்த தமிழின் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாடுவனவற்றைக் காண்போம்.

**வேறு துணை உண்டோ?**

**"செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்**
**செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்!"**

- ❖ சிவந்த சூரியன் மாலையில் மலை உச்சியில் சென்று மறைவான்
- ❖ சிவந்த நிறத்தை உடைய பூக்கள் நிறைந்த காடு ஆகும்.
- ❖ வானம் முழுவதும் சூரியனின் செந்நிறத்தைப் போல உழைக்கும் உழைப்பாளர்களின் கரங்கள் சிவந்து துன்பத்தை அடைய, தொழிலாளர்களின் வியர்வையாகிய வெள்ளம் தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது முத்துக்களைப் போல் அமர்ந்திருக்கும்.
- ❖ இத்தகைய சிறப்பை எல்லாம் வியந்து பாட எனக்கு உன்னை விட்டால் வேறு சரியான துணை உண்டோ சொல்வாயாக! என்று தமிழின் துணை வேண்டும் என்று பாடுகிறார்.

**பொதிகைத் தென்தமிழ்:**

- ❖ கவிஞர்களின் மனதில் பொங்கி வருகின்ற கவிதை எண்ணத்திற்கு உணவாய் எங்கள் முத்தமிழே! நீ உள்ளாய்.

**"பாண்டியரின் சங்கத்தில் கொலுவி ருந்தாய்!**
**பாரிமுதல் வள்ளல்களை ஈன்று தந்தாய்!"**

- ❖ பாண்டிய மன்னர்கள் போற்றிய சங்கப்பலகையில் நடுநாயகமாக உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்து இருந்தாய்.
- ❖ பாரி, காரி, ஓரி, ஆய், பேகன், நள்ளி, அதியன் போன்ற கடையேழு வள்ளல்களைப் பெற்றுத் தந்தாய்!

**சங்கத்தமிழே வா!**

**"மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு**
**மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!"**

- ❖ மொழிக்குப் பெருமை சேர்க்க மீண்டும் அந்தப் பழமை நலம் புகுத்துவதற்கு உடல் சிலிர்க்கும் படி தமிழாகிய குயிலே வா! பாடி வா!
- ❖ கூண்டு அதனை உடைத்து எழுந்த சிங்கம் போலப் பொதிகை மலையில் தோன்றிய தமிழே ஆற்றலுடன் விரைந்து வா! என்று தமிழின் சீரிளமைத் திறம் குறித்துச் சிற்பி பாலசுப்ரமணியம் வியந்து கூறுகிறார்.

**முடிவுரை:**

**"உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்த வாழ்த்துதுமே!"**

காலத்திற்கு ஏற்றவாறு தம்மைப் புதுப்பித்துக்கொண்டும் இன்றளவும் சிறப்புற்றுத் திகழ்கின்ற தமிழின் திறத்தைக் கவிஞர் சிற்பி வியந்து பாடுகிறார்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
SHRI KRISHNA ACADEMY

4. **'சொல்லோவியங்கள்' என்னும் கவிதை நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.**

**நிகழ்ச்சி நிரல்:**

**சொல்லோவியங்கள்**
**கவிதை வெளியீட்டுவிழா - 2019**

இடம் : அரசு மேல்நிலைப்பள்ளி, xxxx
நாள் : 19.06.2019
நேரம் : பிற்பகல் 3 மணி

| | |
|---|---|
| தமிழ்த்தாய் வாழ்த்து | : பள்ளி - மாணவியர் |
| வரவேற்புரை | : திரு. தொல்காப்பியன் (தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, **xxxx** |
| நூல் அறிமுக உரை | : தி.ப. பிறைசூடன் அவர்கள் (எழுத்தாளர்) |
| நூல் வெளியிட்டு வாழ்த்துரை | : முனைவர் தமிழினியன் (மாவட்டக் கல்வி அலுவலர், **xxxx)** |
| முதல் பிரதியைப் பெற்றுக்கொள்பவர் | : திருமதி. அ. சரசுவதி அவர்கள் (தொழிலதிபர் மற்றும் சமூக ஆர்வலர்) |
| ஏற்புரை | : திரு. கவிஞர். த. தமிழரசன் அவர்கள் (முதுகலைத் தமிழாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, **xxxx)** |
| நன்றியுரை | : திரு. இரா. கேசவன் அவர்கள் (பள்ளி - மாணவ இலக்கிய மன்றச் செயலர்) |
| நாட்டு வாழ்த்து | : மாணவ - மாணவியர் |

**நன்றியுரை:**

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று"

என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப எனக்கு வாய்ப்பளித்த நல்ல உள்ளங்களுக்கு மாலை வணக்கம்.

எப்பொழுதெல்லாம் நம் எழுதுகோல் தலை குனிகிறதோ அப்பொழுதெல்லாம் நீ வாழ்வில் தலை நிமிர்வாய் என்றபடி தன் எழுதுகோலைத் தலைகுனிய வைத்து இந்த அவையில் தலைநிமிர்ந்து இருக்கும் தமிழாசிரியருக்கு நன்றி. இவர் சொல்லோவியங்கள் என்ற கவிதை நூலை அழகுபடச் செதுக்கியுள்ளார்.

இவர் செதுக்கியதை வர்ணம் தீட்டி குடமுழுக்கு விழா செய்து நம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும் நூலை வெளியிட்டு வாழ்த்துறை வழங்கிய மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களுக்கு நன்றி. இவ்வுலகில் பிறந்து இறந்த எந்தவித அறிமுகமும் இல்லாமல் செல்கின்றனர். அதற்கு மாறாக பிறையைத் தலையிலே சூடிய சிவனைப் போல் இவ்விழாவிற்கு வருகைதந்து நூல் அறிமுகவுரை தந்த பிறைசூடனுக்கு நன்றி. எந்த ஒரு செயலும் இனிதே தொடங்க இறையருள் தேவை, அதோடு செல்வமும் தேவை என்பதற்கு ஏற்ப செல்வத்தின் நாயகியாம் தொழிலதிபர் திருமதி. சரசுவதி அவர்களின் கரங்களால் முதல் பிரதியைப் பெற்று துவங்கி வைத்தமைக்கு நன்றி. இவ்விழா நடைபெற முழு காரணமாக விளங்கிய தலைமை ஆசிரியர், ஆசிரிய நண்பர்கள், மாணவர்கள், ஏனைய உறவுகளுக்கு விழாக்குழு மூலம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## இயல் - 1

## இளந்தமிழே

### கூடுதல் வினாக்கள் (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

1. நம் பண்பாட்டின் நீட்சி, அடையாளமாக விளங்குவது
   **அ) தமிழ்மொழி** ஆ)தெலுங்கு மொழி இ)ஆங்கில மொழி ஈ) கன்னட மொழி
2. இளந்தமிழே! கவிதை எந்தக் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது
   அ) ஒளிப்பறவை ஆ) சூரிய நிழல் இ) ஒரு கிராமத்து நதி **ஈ) நிலவுப் பூ**
3. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்
   அ) ஒளிப்பறவை ஆ) சூரிய நிழல் **இ) ஒரு கிராமத்து நதி** ஈ) நிலவுப் பூ
4. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பாறை எங்குள்ளது?
   அ) குவளை, ஆற்காடு ஆ) சுரண்டை, திருநெல்வேலி
   இ) கூடங்குளம், தூத்துக்குடி **ஈ) மாங்குளம், மதுரை**
5. சிற்பி சாகித்திய அகாதெமியில் ஆற்றும் பணி
   அ) நூல் வெளியிடும் பணி ஆ) நிறுவனத் தலைவர்
   **ஆ) செயற்குழு உறுப்பினர்** ஈ) பொருளாளர் பணி
6. சிற்பியின் கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்ட மொழிகள்
   அ) மராத்தி, இந்தி, உருது, ஆங்கிலம்
   **ஆ) ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி**
   இ) இந்தி, துளு, தெலுங்கு, ஆங்கிலம்
   ஈ) கன்னடம், மலையாளம், தெலுங்கு, குஜராத்தி
7. கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர்
   **அ) சிற்பி பாலசுப்பிரமணியம்** ஆ) அய்யப்ப மாதவன்
   இ) சுரதா ஈ) நகுலன்
8. பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.
   அ) நகுலன் ஆ) அய்யப்ப மாதவன் இ) சுரதா **ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்**
9. ஒளிப்பறவை, சர்ப்பயாகம் என்ற கவிதை நூல்களின் ஆசிரியர்
   **அ) சிற்பி பாலசுப்பிரமணியம்** ஆ) அய்யப்ப மாதவன்
   இ) சுரதா ஈ) நகுலன்
10. சூரிய நிழல், பூஜ்யங்களின் சங்கிலி என்ற கவிதை நூல்களின் ஆசிரியர்
    அ) நகுலன் ஆ) அய்யப்ப மாதவன்
    இ) சுரதா **ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்**
11. இலக்கியச்சிந்தனைகள், மலையாளக் கவிதை என்ற உரைநடை நூல்களை எழுதியவர்
    **அ) சிற்பி பாலசுப்பிரமணியம்** ஆ) அய்யப்ப மாதவன்
    இ) சுரதா ஈ) நகுலன்
12. சிற்பியின் உரைநடை நூல்
    அ) ஒரு கிராமாத்து நதி **ஆ) அலையும் சுவடும்** இ) நிலவுப்பூ ஈ) அகல் விளக்கு
13. சிற்பி பாலசுப்பிரமணியம் மலையாளக் கவிதைகளையும் புதினங்களையும் மொழிபெயர்த்த மொழி
    **அ) தமிழ்** ஆ) தெலுங்கு இ) கன்னடம் ஈ) மராத்தி
14. இளந்தமிழே என்னும் பாடலின் ஆசிரியர்
    **அ) சிற்பி பாலசுப்பிரமணியம்** ஆ) பெருந்தேவனார்
    இ) தமிழண்ணல் ஈ) மு. வரதராசனார்
15. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள்
    அ) கோப்பெருந்தேவி ஆ) வேண்மாள் **இ) தமிழன்னை** ஈ) ஔவையார்
16. பாரி முதலான வள்ளல்களை ஈன்று தந்தவள்
    அ) கோப்பெருந்தேவி ஆ) வேண்மாள் **இ) தமிழன்னை** ஈ) ஔவையார்



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

17. எம்மருமைச் செந்தமிழே! உன்னையல்லால் ஏற்றதுணை வேறுண்டோ- என்று பாடியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் **இ) சிற்பி பாலசுப்பிரமணியம்** ஈ) திரு.வி.க

18. **பொருத்துக**

| | | |
|---|---|---|
| செம்பருதி | - | 1. உருவகம் |
| முத்துமுத்தாய் | - | 2. வினையெச்சம் |
| சிவந்து | - | 3. அடுக்குத்தொடர் |
| வியர்வைவெள்ளம் | - | 4. பண்புத்தொகை |

**அ) 4 3 2 1** ஆ) 3 4 1 2 இ) 2 1 4 3 ஈ) 3 2 1 4

19. செம்பரிதி- இச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதியைக் கண்டறிக.
**அ) ஈறுபோதல்** ஆ) இனமிகல் இ) ஆதிநீடல் ஈ) முன்னின்ற மெய்திரிதல்

20. சிற்பியின் பன்முகங்களில் பொருந்தாததைக் கூறுக.
அ) கவிஞர் **ஆ) ஓவியர்** இ) பேராசிரியர் ஈ) மொழிபெயர்ப்பாளர்

21. 'சாய்ப்பான்' என்பதன் சரியான பகுபதப் பிரிப்பு முறை
அ) சாய்ப்பு + ஆன் ஆ) சாய் + ப் + ஆன்
இ) சாய் + ப் + ப் + அன் **ஈ) சாய் + ப் + ப் + ஆன்**

22. கருத்து 1: பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள் தமிழ்த்தாய்
கருத்து 2: விம்முகின்ற தோள்கள் செந்நிறத்துப் பூக்காடானது.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) இரண்டு கருத்தும் தவறு **ஈ) கருத்து 1 சரி, 2 தவறு**

23. சிற்பி பாலசுப்பிரமணியம் எத்தனை முறை சாகித்திய அகாதெமி விருது பெற்றுள்ளார்?
அ) மூன்று **ஆ) இரண்டு** இ) நான்கு ஈ) ஐந்து

24. **பொருத்துக**

| | | |
|---|---|---|
| பரிதி | - | 1. பெற்று |
| இயம்பு | - | 2. கதிரவன் |
| முன்னம் | - | 3. கூறு |
| ஈன்று | - | 4. முன்பு |

அ) 4 3 2 1 ஆ) 3 4 1 2 **இ) 2 3 4 1** ஈ) 3 2 1 4

25. 'வியந்து' இச்சொல்லைப் பிரிக்கும் முறை
அ) வியந் + த் + உ ஆ) வியந்து + து
இ) வி + யந் + த் + உ **ஈ) விய + த்(ந்) + த் + உ**

26. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்
செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' - இவ்வடியில் இடம் பெறும் தொடை நயம்
**அ) மோனை** ஆ) இயைபு இ) எதுகை ஈ) முரண்

## கூடுதல் வினாக்கள் (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1. **சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய கவிதை நூல்கள் யாவை?**
   - ❖ ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி
2. **சிற்பியின் உடைநடை நூல்கள் யாவை?**
   - ❖ இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும்
3. **சிற்பி எந்தப் படைப்புக்கு இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றார்?**
   - ❖ மொழி பெயர்ப்பு (அக்னிசாட்சி 2001)
   - ❖ ஒரு கிராமத்து நதி (2002)
4. **தொழிலாளர்களின் கைகள் எதனைப் போலச் சிவந்துள்ளதாகக் கவிஞர் சிற்பி கூறுகிறார்?**
   - ❖ மாலையில் மறையும் கதிரவனின் கதிரொளி போலத் தொழிலாளர்களின் கைகள் சிவந்துள்ளதாகக் கூறுகிறார்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

5. **தமிழ்மொழியின் பழமைநலம் எவை?**
   - ❖ தமிழ்மொழி பாண்டியர்களின் அவையிலே தன்னிகரற்ற செம்மொழியாய் ஆட்சி செய்தது.
   - ❖ பாரி போன்ற வள்ளல்கள் பலரை தமிழ் மண்ணிற்குத் தந்த பழமை நலம் கொண்ட மொழி.

**கூடுதல் வினாக்கள் (நான்கு மதிப்பெண் வினாக்கள்)**

1. **"மீண்டும் அந்த பழமைநலம் புகுத்துவதற்கு மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா என்று சிற்பி கூறும் கவி நயத்தை விளக்குக. (அல்லது)**
   **தமிழன்னையின் பழஞ்சிறப்புகளாகச் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவன யாவை?**
   - ❖ கவிஞர்களின் மனதில் பொங்கி வருகின்ற கவிதை எண்ணத்திற்கு உணவாய் எங்கள் முத்தமிழே! நீ உள்ளாய். சங்கப்பலகையில் நடுநாயகமாக உயர்ந்த சிம்மாசனத்தில் அமர்ந்து இருந்தாய் நீ.
   - ❖ பாரி, காரி, ஓரி, ஆய், பேகன், நல்லி, அதியன் என்ற கடையெழு வள்ளல்களைப் பெற்றுத் தந்தாய்! மொழிக்குப் பெருமை சேர்த்தாய்
   - ❖ மீண்டும் அந்தப் பழமை நலம் புகுத்துவதற்கு உடல் சிலிர்க்கும் படி தமிழாகிய குயிலே வா பாடி வா!
   - ❖ கூண்டு அதனை உடைத்து எழுந்த சிங்கம் போலப் பொதிகையில் தோன்றிய தமிழே ஆற்றலுடன் விரைந்து வா! என்று சிற்பி பாடுகிறார்.

**கூடுதல் வினாக்கள் (ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

**தன்னேர் இலாத தமிழ்**
**- தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்**

1. அணியிலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று
   அ) அகத்தியம் ஆ) இலக்கண சூறாவளி
   **இ) தண்டியலங்காரம்** ஈ) இலக்கணக் கொத்து
2. தன்னேர் இலாத தமிழ் பாடல் எப்பகுதியில் இடம் பெற்றுள்ளது
   அ) குவலயானந்தம் (சொல்அணியியல்) **ஆ) தண்டியலங்காரம் (பொருளணியியல்)**
   இ) வீரசோழியம் (பொருளணியியல்) ஈ) மாறனலங்காரம் (எழுத்தணியியல்)
3. வானம் அளந்தது அனைத்தையும் அளக்கும் வலிமை மிக்கது
   அ) நிலவு ஆ) கற்பனை **இ) தமிழ்** ஈ) சூரியன்
4. "மின்னேர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது" இவ்வடியில் 'ஆழி' என்பதன் பொருள்
   **அ) சக்கரம்** ஆ) தமிழ் இ) சூரியன் ஈ) கடல்
5. அணியிலக்கணத்தோடு பிற இலக்கணத்தையும் கூறும் நூல்
   **அ) முத்து வீரியம்** ஆ) திவாகர நிகண்டு
   இ) இலக்கண சூறாவளி ஈ) இலக்கணக் கொத்து
6. இருளைப் போக்கும் இரண்டு
   அ) கதிரவன், நிலவு **ஆ) கதிரவன், தமிழ்**
   இ) அறிவு, தமிழ் ஈ) அறிவு, ஞானம்
7. தமிழ் தோன்றிய மலை
   அ) குடகு **ஆ) பொதிகை** இ) இமயமலை ஈ) விந்தியமலை
8. மின்னலைப் போன்று ஒளிர்வது
   **அ) கதிரவன்** ஆ) தமிழ் இ) வானம் ஈ) நிலவு

SHRI KRISHNA ACADEMY

9. பொருத்துக.

| | | |
|---|---|---|
| வெங்கதிர் | - | 1. வினையெச்சம் |
| உயர்ந்தோர் | - | 2. இடைக்குறை |
| இலாத | - | 3. வினையாலணையும் பெயர் |
| வந்து | - | 4. பண்புத்தொகை |

**அ) 4 3 2 1** ஆ) 3 4 1 2 இ) 2 1 4 3 ஈ) 3 2 1 4

10. காவியதர்சம் என்பது
**அ) வடமொழி இலக்கணநூல்** ஆ) புராண நூல்
இ) வரலாற்று நூல் ஈ) மலையாள இலக்கிய நூல்

11. காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட நூல்
அ) மாறனலங்காரம் **ஆ) தண்டியலங்காரம்** இ) வீரசோழியம் ஈ) முத்துவீரியம்

12. தண்டியலங்காரத்தின் ஆசிரியர்
அ) ஐயனாரிதனார் ஆ) சமணமுனிவர் **இ) தண்டி** ஈ) பவணந்தி

13. தண்டி எந்த நூற்றாண்டைச் சார்ந்தவர்
அ) கி.பி.11 **ஆ) கி.பி.12** இ) கி.பி.13 ஈ) கி.பி.14

14. தண்டியலங்காரம் எத்தனை பெரும் பிரிவுகளை உடையது.
அ) இரண்டு **ஆ) மூன்று** இ) நான்கு ஈ) ஐந்து

15. **கருத்து 1:** மக்களின் அறியாமையை அகற்றுவது தமிழ்மொழியாகும்.
**கருத்து 2:** புற இருளைப் போக்க கதிரவன் உதவும்
**அ) இரண்டு கருத்தும் சரி** ஆ) கருத்து 1 சரி 2 தவறு
இ) கருத்து 1 தவறு 2 சரி இ) இரண்டு கருத்தும் தவறு

16. கருத்து 1: 'தொன்னூல் விளக்கம்' அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்
கருத்து 2: 'குவலயானந்தம்' என்னும் நூல் அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் நூல்
அ) இரண்டு கருத்தும் சரி ஆ) கருத்து 1 சரி 2 தவறு
**இ) கருத்து 1 தவறு 2 சரி** இ) இரண்டு கருத்தும் தவறு

17. 'ஈறுபோதல் , முன்னின்ற மெய் திரிதல்' எச்சொல்லுக்குரிய புணர்ச்சி விதி?
அ) கருங்குயில் **ஆ) வெங்கதிர்** இ) நெடுந்தேர் ஈ) முதுமரம்

18. சரியானதைத் தேர்க
அ) வீரசோழியம் - நாவல்
ஆ) முத்து வீரியம் - சிறுகதை
**இ) குவலயானந்தம் - அணியிலக்கணம்**
ஈ) மாறனலங்காரம் - பொருளிலக்கணம்

19. பொருந்தாததைத் தேர்க
அ) தமிழ்மொழி - பொதிகை மலை
**ஆ) தொல்காப்பியம் - இலக்கிய நூல்**
இ) தண்டியலங்காரம் - தண்டி
ஈ) காவியதர்சம் - வடமொழி இலக்கணம்

20. 'ஓங்கலிடை" எனத்தொடங்கும் தண்டியின் பாடலுக்குரிய பா வகை
அ) இன்னிசை வெண்பா **ஆ) நேரிசை வெண்பா** இ) ஆசிரியப்பா ஈ) வஞ்சிப்பா

21. 'ஏங்கொலி நீர்' பொருள் தருக.
அ) ஆகாயம் ஆ) மலை இ) பூ **ஈ) கடல்**

22. 'உயர்ந்தோர்' - இச்சொல்லைப் பிரிக்கும் முறை
அ) உயர் + ந் + ஓர் **ஆ) உயர்ந்து + த்(ந்) + த் + ஓர்**
இ) உயர்ந்து + ஓர் ஈ) உயர் + த்(ந்) + தோர்

23. உலகின் புற இருளை அகற்றுவது
அ) தமிழ் **ஆ) ஞாயிறு** இ) திங்கள் ஈ) விளக்கு


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

24. ‘ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும்’ - இவ்வடியில் பயின்று வந்துள்ள தொடைநயம்

**அ) அடி எதுகை** ஆ) அடி மோனை இ) சீர் எதுகை ஈ) சீர்மோனை

29. **பொருத்துக.**

ஓங்கல் - 1. தன்னிகரில்லாத
தொழுதல் - 2. உலகம்
ஞாலம் - 3. வணங்குதல்
தன்னேர் - 4. மலை

**அ) 4 3 2 1** ஆ) 3 2 4 1 இ) 4 2 1 3 ஈ) 3 2 1 4

25. கூற்று : ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் ---- என்னும் செய்யுளில் பொருள் வேற்றுமையணி பயின்று வந்துள்ளது.

காரணம் : இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

**அ) கூற்றும் காரணமும் சரி** ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும் காரணமும் தவறு

## கூடுதல் வினாக்கள் (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1. **அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?**
   - தண்டியலங்காரம்
   - மாறனலங்காரம்
   - குவலயானந்தம்
2. **அணியிலக்கணத்தோடு பிற இலக்கணத்தையும் கூறும் நூல்கள் யாவை?**
   - தொல்காப்பியம்
   - வீர சோழியம்
   - இலக்கண விளக்கம்
   - தொன்னூல் விளக்கம்
   - முத்து வீரியம்
3. **தண்டியலங்காரத்தின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை?**
   - பொதுவியல்
   - பொருளணியியல்
   - சொல்லணியியல்

## கூடுதல் வினாக்கள் (நான்கு மதிப்பெண் வினாக்கள்)

1. **தண்டியலங்காரத்தைப் பற்றிக் குறிப்பெழுதுக.**
   - இந்நூலின் ஆசிரியர் தண்டி ஆவார்.
   - தண்டியலங்காரம், அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று, பாடப்பகுதி பொருளணியியல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
   - காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் தண்டி ஆவார்.
   - இவர் கி.பி.(பொ.ஆ) 12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர்.
   - இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும் பிரிவுகளை உடையது.
   - இலக்கண நூலார், உரையாசிரியர்கள் ஆகியோர் பலரால் எடுத்தாளப்பட்ட பெருமை பெற்றது.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## கூடுதல் வினாக்கள் (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

### உரைநடை
### தமிழ்மொழியின் நடை அழகியல்

1. தமிழ்மொழியின் நடை அழகியல் என்னும் கட்டுரையின் ஆசிரியர்
   அ) தி.சு. நடராசன் ஆ) ஔவை நடராசன்
   இ) சிற்பி. பாலசுப்ரமணியன் ஈ) தமிழண்ணல்
2. --------- இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையில் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன
   அ) தமிழில் ஆ) ஆங்கிலத்தில்
   இ) தெலுங்கில் ஈ) வடமொழியில்
3. மலரும் மணமும் போலக் கவிதையுடன் இரண்டறக் கலந்திருப்பது
   அ) தமிழர்களின் அழகுணர்வு ஆ) தலைவன் தலைவியின் அன்புணர்வு
   இ) வள்ளலின் வள்ளண்மையுணர்வு ஈ) பக்தர்களின் தெய்வ உணர்வு
4. அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாகத் தோற்றம் தருவது
   அ) புராணம் ஆ) சங்க இலக்கியம் இ) கல்வெட்டு ஈ) நாணயம்
5. அழகு, இந்த -------------- செய்தி
   அ) மனிதரின் ஆ) பேரண்டத்தின் இ) காதலரின் ஈ) கடவுளரின்
6. அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருவது
   அ) தொல்காப்பியம் ஆ) சங்கஇலக்கியம் இ) புராணம் ஈ) மனிதநடத்தை
7. இலக்கியத்தின் -------------- பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு
   அ) நயம் ஆ) பயன் இ) நிலை ஈ) ஈடுபாடு
8. இலக்கியத்தின் நோக்கம் அல்லது அறிவியல் சார்ந்த கருத்துநிலைகள் கலை உருவாக்கத்தின் போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்று கூறுவது
   அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) இலக்கண விளக்கம் ஈ) தொன்னூல் விளக்கம்
9. சங்க இலக்கியம் பாடற்பொருள்களாக வடிவமைத்துள்ளவை
   i) அகத்திணை சார்ந்த செய்திகள் ii) புறத்திணைகள் சார்ந்த செய்திகள்
   அ) i சரி ஆ) ii சரி இ) இரண்டும் சரி ஈ) இவற்றில் எதுவுமில்லை
10. அகன் ஐந்திணைகளைப் பேசுவது
    அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம்
    இ) தொல்காப்பியம் ஈ) புறப்பொருள் வெண்பாமாலை
11. பா வகைகள் ஆசிரியம்(ஆசிரியப்பா) முதற்கொண்டு
    அ) மூன்று ஆ) நான்கு இ) ஒன்று ஈ) இரண்டு
12. அந்நில மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்ப- என்று பாவகைகளோடு அறிவியல் கருத்துகளை இணைத்துச் சொல்வது
    அ) சங்க இலக்கியம் ஆ) பரிபாடல் இ) தொல்காப்பியம் ஈ) அகத்தியம்
13. சரியான கூற்றினைக் கண்டறி.
    i) ஒலிக்கோலங்கள் ii) சொற்களின் புலம் iii)தொடரியல் போக்குகள்
    அ) i, ii சரி ஆ) ii, iii சரி இ) மூன்றும் சரி ஈ)இரண்டு மட்டும் தவறு
14. கவிதையின் ------------- நடை
    அ) இயங்காற்றல்தான் ஆ) அழகுதான் இ) பார்வைதான் ஈ) இயல்புதான்
15. நடைபெற்றியலும் என்பது தொல்காப்பியத்தின் ------------- வரும் சொற்றொடர்
    அ) கிளவியாக்கத்தில் ஆ) எழுத்ததிகாரம்

SHRI KRISHNA ACADEMY

இ) சொல்லதிகாரம் ஈ) செய்யுளியல்

16. ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி- என்று குறிப்பிடும் நூல்
அ) கலித்தொகை **ஆ) தொல்காப்பியம்** இ) பரிபாடல் ஈ) குறவஞ்சி

17. 'கடந்தடுதானை மூவிருங்கூடி - என்று தொடங்கும் பாடலடிகளை உடைய நூல்
அ) அகநானூறு **ஆ) புறநானூறு** இ) கலித்தொகை ஈ) பரிபாடல்

18. பாடஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக் கடாஅ யானைக் கலிமான் பேக - என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) அகநானூறு **ஆ) புறநானூறு** இ) கலித்தொகை ஈ) பரிபாடல்

19. புணரின் புணராது பொருளே; பொருள்வயின் பிரியின் புணராது புணர்வே என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
அ) புறநானூறு **ஆ) நற்றிணை** இ) அகநானூறு ஈ) கலித்தொகை

20. நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை - என்னும் அடிகள் இடம்பெற்றுள் நூல்
**அ) புறநானூறு** ஆ) நற்றிணை இ) அகநானூறு ஈ) கலித்தொகை

21. ------------- கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்களில் நிரம்பிக் கிடக்கின்றன.
அ) குறவஞ்சிக் **ஆ) முல்லைக்** இ) மருதக் ஈ) பாலைக்

22. 'கிடை' என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களைச் சொல்லி அழைப்பவர்
அ) இந்திரா பார்த்தசாரதி **ஆ) கி. ராஜநாராயணன்**
இ) ஜெயகாந்தன் ஈ) ஜெயமோகன்

23. தொகைநிலை, தொகைமொழி பற்றிப் பேசும் தொல்காப்பியத்தின் இயல்
**அ) எச்சவியல்** ஆ) இடையியல் இ) உவமையியல் ஈ) எழுத்தியல்

24. 'நீர்படு பசுங்கலம்' என்னும் அடிகளுக்குரிய நூல்
அ) புறநானூறு ஆ) அகநானூறு **இ) நற்றிணை** ஈ) பரிபாடல்

25. நம்பி நெடுஞ்செழியனுடைய சாவுச் சடங்கு, சர்ச்சைக்கு உள்ளானது பற்றிப் பாடியவர்
**அ) பேரெயின் முறுவலார்** ஆ) வெள்ளைக்குடி நாகனார்
இ) நரிவெரு உத்தலையார் ஈ) கோவூர்கிழார்

26. இடுக வொன்றோ, சுடுகவொன்றோ, படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே - என்ற புறநானூறு அடிகளில் குறிப்பிடப்படும் மன்னர்
அ) அறிவுடைநம்பி **ஆ) நம்பி நெடுஞ்செழியன்**
இ) செங்குட்டுவன் ஈ) கிள்ளிவளவன்

27. 'தொடியுடைய தோள் மணந்தனன்' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் ஆசிரியர்
**அ) பேரெயின் முறுவலார்** ஆ) பொன்முடியார்
இ) கோவூர்கிழார் ஈ) வெள்ளைக்குடி நாகனார்

28. பேரெயின் முறுவலாரின் புறநானூற்றுப் பாடலில் இடம்பெற்றுள்ள பண்புகள்
அ) 16 **ஆ) 18** இ) 15 ஈ) 14

29. தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் -------------- முதன்மை ஆதாரம்
**அ) சங்க இலக்கியமே** ஆ) சங்கமருவியஇலக்கியமே
இ) நீதிஇலக்கியமே ஈ) காப்பியமே

30. தமிழ் அழகியல் என்னும் நூலின் ஆசிரியர்
**அ) தி.சு நடராசன்** ஆ) ஔவை நடராசன்
இ) தமிழண்ணல் ஈ) வல்லிக்கண்ணன்

31. ------------ கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.சு. நடராசன் குறிப்பிடத்தக்கவர்
அ) திரைக் **ஆ) திறனாய்வுக்** இ) மொழிபெயர்ப்புக் ஈ) பேச்சு


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
SHRI KRISHNA ACADEMY

32. தி.சு. நடராசன் -------------- ஆகப் பணிபுரிந்தார்
அ) மாவட்ட ஆட்சியர் **ஆ) பேராசிரியர்** இ) வழக்குரைஞர் ஈ) மருத்துவர்

33. 'தமிழின் பண்பாட்டு வெளிகள்' நூலின் ஆசிரியர்
**அ) தி.சு நடராசன்** ஆ) ஔவை நடராசன்
இ) தமிழண்ணல் ஈ) வல்லிக்கண்ணன்

34. போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்
**அ) தி.சு நடராசன்** ஆ) ஔவை நடராசன்
இ) தமிழண்ணல் ஈ) வல்லிக்கண்ணன்

35. மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் பல்கலைக்கழகம் போன்றவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்
**அ) தி.சு நடராசன்** ஆ) ஔவை நடராசன்
இ) தமிழண்ணல் ஈ) வல்லிக்கண்ணன்

36. **பொருத்துக**

| | |
|---|---|
| பாரதியின் கடிதங்கள் | - i) தி.சு. நடராசன் |
| இலக்கண உலகில் புதிய பார்வை | - ii) பாரதிதாசன் |
| தமிழ் அழகியல் | - iii) ரா.அ. பத்மநாபன் |
| அழகின் சிரிப்பு | - iv) டாக்டர். பொற்கோ |

**அ) iii iv i ii** ஆ)iii ii iv i இ) iii i iv ii ஈ) iv iii ii i

37. சங்கப் பாடல்களில் முக்கியமான பண்பு
அ) சொற்புலம் **ஆ)ஒலிக்கோலம்** இ) தொடரியல் போக்கு ஈ) நடையியல்

38. செய்யுளை ஓர் உள்ளமைப்பாகக் கூறும் நூல்
அ) நன்னூல் **ஆ) தொல்காப்பியம்**
இ) யாப்பருங்கலக்காரிகை இ) தண்டியலங்காரம்

39. காளைகளின் பல இனங்களைக் காட்டும் நூல்
அ) தொல்காப்பியம் **ஆ) முல்லைக்கலி** இ) புறநானூறு ஈ) பதிற்றுப்பத்து

40. பாடலின் தளத்தைப் பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது
**அ) தொடரியல் வடிவம்** ஆ) ஒலிக்கோலம்
இ) சொற்றொடர் நிலை ஈ) சொற்புலம்

41. கருத்து 1: சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.
கருத்து 2: தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் சங்க இலக்கியமே முதன்மை ஆதாரம்.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
இ) கருத்து 1 சரி, 2 தவறு **ஈ) இரண்டு கருத்தும் சரி**

42. கருத்து 1: முல்லைக்கலியில் காளை(எருது)களின் பல இனங்களைக் காட்டும் சொற்கள் நிரம்பக் கிடக்கின்றன.
கருத்து 2: சொல்வளம் ஒரு பண்பாட்டின் அடையாளமாகவும் இருக்கிறது.
அ) கருத்து 1 தவறு ஆ) கருத்து 1 சரி, 2 தவறு
**அ) கருத்து இரண்டும் சரி** ஈ) கருத்து 1 தவறு, 2 சரி

43. கருத்து: தொன்மையான மொழி சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது.
விளக்கம்: மொழித்தோன்ற அடிப்படையாக இருப்பது ஒலியே. ஒலியை வெவ்வேறு வடிவங்களில் உச்சரிக்கும் போது மொழி தோன்றுகிறது.
அ) கருத்து சரி விளக்கம் தவறு **ஆ) கருத்தும் விளக்கமும் சரி**
இ) கருத்து தவறு விளக்கமும் தவறு ஈ) கருத்து தவறு விளக்கம் சரி

44. பொருத்தமானதைக் கண்டறிக.
அ) பாவகை - ஐந்து
ஆ) வஞ்சி - வெண்பா நடைத்தே


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

இ) பனிநீர் - தொகைமொழி
ஈ) காமர் வனப்பு - தொடரியல் போக்கு

45. பொருத்தமானதைத் கண்டறிக
அ) கடாஅ யானைக் கலிமான் பேக - முல்லைக்கலி
ஆ) புணரின் புணராது பொருளே - தொல்காப்பியம்
இ) இவன் தந்தை தந்தை - நற்றிணை
ஈ) யாமும் பாரியும் உளமே - புறநானூறு

46. பொருந்தாததைத் தேர்க.
அ) கன்னி விடியல் - தொகை மொழி
ஆ) பொய்படு சொல் - மறித்தாக்கம்
இ) சங்கப்பாடல்கள் - மறுதலைத்தொடர்
ஈ) கி. ராஜநாராயணன் - கிடை

## கூடுதல் வினாக்கள் (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

**1. பண்டைய கவிஞர்களுக்கு இயல்பாக இருந்த உணர்வு எது?**

❖ கவிப்பொருளை அமைக்கின்ற விதத்தில் உணர்ச்சிகளைப் பாய்ச்சும் விதத்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச் செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வு, பண்டைக் கவிஞர்களுக்கு இயல்பாக இருந்தது.

**2. மொழிசார் கலைவளர்ச்சியில் தொல்காப்பியத்தின் பங்கு யாது? (அல்லது) செய்யுளின் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கூறுவன யாவை?**

❖ அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்துத் தருகின்ற தொல்காப்பியம் இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கணம் ஆகும்.

❖ எழுத்துகள் பற்றி பேசும்போதே, செய்யுளின் வழக்கு பேசப்பட்டுவிடுகிறது. எழுத்தையும் சொல்லையும் போன்றே செய்யுளையும் ஓர் உள்ளமைப்பாகத் தொல்காப்பியம் கருதுகிறது.

**3. கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்றால் என்ன?**

❖ இலக்கியம் என்ற மொழிசார் கலை, மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்ற மட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது.

❖ இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத்தன்மையைத் தந்துவிடுகிறது. இத்தகைய தன்மைதான், கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று பேசப்படுகிறது. இதனால்; மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக ஆகிவிடுகிறது.

**4. மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**

❖ உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியவை மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை ஆகும்.

**5. லட்சியப்பொருளோடு இரண்டற இணைத்து விடுவது எது?**

❖ அகன் ஐந்திணைகளைப் பேசுகிற தொல்காப்பியம் புணர்தல், பிரிதல் முதலான அகன் ஐந்திணைகளை இன்பம், பொருள், அறம் ஆகிய அறவியல் லட்சியப் பொருள்களோடு இணைத்துவிடுகிறது.

**6. ஒலிப்பின்னல் என்பது யாது?**

❖ மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக்கருவியோடும் தான் பிறக்கிறது.

❖ ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன.

❖ இதனையே அந்தப் பனுவலின் பாடலின் - ஒலிப்பின்னல் (sound texture) என்கிறோம்.

**7. தமிழிலக்கியங்களில் காணப்படும் சொல்வளத்திற்கான சான்றுகளைத் தருக.**

❖ முல்லைக்கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

❖ கி.ராஜநாராயணன் ‘கிடை’ என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

8. **தி.சு. நடராசன் இயற்றிய நூல்கள் யாவை?**
   - ❖ கவிதையெனும் மொழி
   - ❖ திறனாய்வுக்கலை
   - ❖ தமிழ் அழகியல்
   - ❖ தமிழின் பண்பாட்டு வெளிகள்

9. **தி.சு. நடராசன் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய பல்கலைக்கழகங்களைக் கூறுக.**
   - ❖ மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
   - ❖ போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம்
   - ❖ திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

11. **தொகை நிலை பற்றித் தொல்காப்பிய எச்சவியல் பேசுவன யாவை?**
   - ❖ சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு இது.
   - ❖ இதனைத் தொகை நிலை என்று தொல்காப்பிய எச்சவியல் பேசுகிறது.
   - ❖ நீர்படுகின்ற – அல்லது நீர்பட்ட – பசுமையான கலம் என்பது, எதுவும் தொகாமல் வருகிற தொடர்மொழி.
   - ❖ அதுவே, 'நீர்படு பசுங்கலம்'' என்று ஆகும்போது தொகைமொழி. தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு ஆகும்.

12. **இலக்கியம் எவற்றைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்ற வேண்டியுள்ளது?**
   - ❖ மனித நாக்குகளின் ஈரம்பட்டுக் கிடக்கும் மொழியானது, பேசுபவன், கேட்பவன் ஆகியோருடைய தனிப்பட்ட சூழல்கள் பேசும் போதும், கேட்கும் போதும் தனிச்சூழல்களைத் தனக்குரிய அழகியல் சாதனமாக மாற்ற வேண்டும்.

13. **தமிழ் இலக்கியத்தின் பயன்களாகக் கட்டுரையாசிரியர் கூறுவன யாவை?**
   - ❖ அறம், பொருள், இன்பம் அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளை உணர்த்துவனவாக தமிழ் இலக்கியத்தின் பயன்கள் இருக்க வேண்டும்.

14. **தமிழ் அழகியலின் நெடும்பரப்புகளென ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகிறார்?**
   - ❖ சமூக பண்பாட்டு மரபிற்கேற்பவே, கலை படைப்பை, அழகியல் நெறியை, பண்பாட்டின் இலச்சினையாகச் சித்தரிப்பதற்குத் தமிழ்மரபு முன்வந்திருக்கிறது; முன்மொழிந்திருக்கிறது. இதுவே தமிழ் அழகியலின் நெடும்பரப்பு ஆகும்.

15. **பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றனவை எவை?**
   - ❖ ஒலிக்கோலங்கள்
   - ❖ சொற்புலம்
   - ❖ சொற்றொடர்நிலை

16. **எந்தத் தொன்மையான மொழியும் எவற்றிலிருந்து தொடங்குகிறது?**
   - ❖ எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும் தான் தொடங்குகிறது.

17. **சொல்லில் புதைந்து கிடப்பன யாவை?**
   - ❖ சொல்லில் தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.
   - ❖ கலையும் பண்பாடும் வரலாறும் அரசியலும் பொதிந்து கிடக்கின்றன.

18. **சொல்வளம் என்பது யாது?**
   - ❖ சொல்வளம் என்பது தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதைக் குறிக்கும்.
   - ❖ ஒன்றிற்கு மேற்பட்ட சொற்கள் கவவுக்கை நெகிழாமல் முயங்கிக் கிடப்பதையும் குறிக்கும்.

19. **தொடரியல் வடிவம் செய்யும் பணிகள் யாவை?**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

❖ ஒலிக்கோலமும் சொற்புலமும் சொற்றொடர்நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால், பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது.

**கூடுதல் வினாக்கள் (நான்கு மதிப்பெண் வினாக்கள்)**

**1. ஒரு பண்பாட்டின் அடையாளம் சொல்வளம் என்பதை இலக்கியங்கள் வழி சான்று காட்டி விளக்குக.**

**சொற்புலம்:**

❖ முல்லைக்கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

❖ கி.ராஜநாராயணன் ‘கிடை’ என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்.

**தொகைநிலை:**

❖ சங்க இலக்கிய மொழியின் அடையாளமாக உள்ள ஒரு பண்பு இது.

❖ இதனைத் தொகை நிலை என்று தொல்காப்பிய எச்சவியல் பேசுகிறது.

❖ நீர்படுகின்ற – அல்லது நீர்பட்ட – பசுமையான கலம் என்பது, எதுவும் தொகாமல் வருகிற தொடர்மொழி.

❖ அதுவே, ‘நீர்படு பசுங்கலம்’’ என்று ஆகும்போது தொகைமொழி. தொகைமொழி என்பது செறிவாக்கப்பட்ட ஒரு வடிவமைப்பு ஆகும்.

**3. தி. சு. நடராசன் குறிப்பு வரைக.**

❖ திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.சு.நடராசன் குறிப்பிடத்தக்கவர்.

❖ திறனாய்வாளராகப் பரவலாக அறியப்படும் இவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

❖ கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

**கூடுதல் வினாக்கள் (ஒரு மதிப்பெண் வினாக்கள்)**

**தம்பி நெல்லையப்பருக்கு**
**- பாரதியார்**

1. தமிழ்நாட்டில் வீதிதோறும் இருக்க வேண்டியது எது எனப் பாரதியார் விரும்புகிறார்?
அ) ஆலயம் ஆ) தொழிற்சாலை **இ) பள்ளிக்கூடம்** ஈ) எதுவுமில்லை

2. **கருத்து 1:** ஆணும் பெண்ணும் ஒருயிரின் இரண்டு தலைகள் என்றார் பாரதி
**கருத்து 2:** பரலி. சு. நெல்லையப்பர் பாரதியின் பாப்பாப்பாட்டை பதிப்பித்தவர்
அ) இரண்டு கருத்தும் தவறு **ஆ) இரண்டு கருத்தும் சரி**
இ) கருத்து 1 தவறு 2 சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

3. சரியானதைத் தேர்க
அ) முரசுப்பாட்டு - குந்திகேசவர்
ஆ) நெல்லைத் தென்றல் - வ.உ.சிதம்பரனார்
**இ) பாரதி கடிதங்கள் - ரா.அ. பத்மநாபன்**
ஈ) வம்சமணி தீபிகை - சு. நெல்லையப்பர்

4. சரியானதைத் தேர்க
அ) கவிகேசரி சாமி தீட்சிதர் - பாரதி கடிதங்கள்
ஆ) இளசைமணி - சூரியோதயம்



SHRI KRISHNA ACADEMY

இ) கண்ணன்பாட்டு - ரா.அ.பத்மநாபன்
**ஈ) வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாறு - சு. நெல்லையப்பர்**

5. பொருத்தாததைத் தேர்க.
அ) இளசை மணி - வம்சமணி தீபிகை நூலின் மறுபதிப்பு
ஆ) வம்சமணி தீபிகை - கவிகேசரி சாமி தீட்சிதர்
**இ) பரலி சு. நெல்லையப்பர் - சுதந்திர போராட்ட வீரர்**
ஈ) பாரதி வாழ்த்து - பரலி சு. நெல்லையப்பர்

6. **பொருத்துக**
அ) வம்சமணி தீபிகை - சு. நெல்லையப்பர்
ஆ) பாரதி கடிதங்கள் - ரா.அ.பத்மநாபன்
இ) நெல்லைத் தென்றல் - கவிகேசரி சாமி தீட்சிதர்
அ) 1, 2, 3 **ஆ) 3, 2, 1** இ) 2, 3, 1 ஈ) 1, 3, 2

7. பாரதி நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதிய இடம், நாள்
**அ) புதுச்சேரி,19 ஜுலை 1915** ஆ) நெல்லை, 14 ஜுலை 1914
இ) கடலூர், 18 ஆகஸ்ட் 1914 ஈ) காரைக்கால், 19 ஜுலை 1915

8. நெல்லையப்பரை யார் காத்திட வேண்டும் என்கிறார் பாரதி?
அ) சிவன் ஆ) முருகன் **இ) பராசக்தி** ஈ) துர்க்கை

9. நெல்லையப்பர் எதனைக் கடமையாகக் கொள்ள வேண்டும் என்று பாரதி கூறினார்?
அ) பெற்றோரைக் காப்பதை ஆ) விடுதலைக்குப் போராடுவதை
**இ) தமிழ் வளர்ப்பதை** ஈ) சமூக இழிவை களைவதை

10. 'தம்பி - உள்ளமே உலகம்' என்று யார் யாருக்குக் கூறியது?
அ) அறிஞர் அண்ணா, கலைஞருக்கு **ஆ) பாரதி, நெல்லையப்பருக்கு**
இ) மு.வ. இளைஞர்களுக்கு ஈ) திரு.வி.க. தமிழர்களுக்கு

11. உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ - என்பதில் 'உனக்கு' என்பது யாரைக் குறிக்கும்?
அ) தமிழை **ஆ) நெல்லையப்பரை** இ) குயிலை ஈ) இளைஞர்களை

12. பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக்கொண்டான் என்றெழுது என்று கடிதம் எழுதியவர்
அ) நெல்லையப்பர் **ஆ) பாரதியார்** இ) வாணிதாசன் இ) பாரதிதாசன்

13. நெல்லையப்பரை பாரதி ------------ என்று கூவு என்கிறார்
அ) வாழ்க வாழ்க **ஆ) தொழில்கள் தொழில்கள்**
இ) மனிதர்கள் மனிதர்கள் ஈ) வெல்க வெல்க

14. ஒருயிரின் இரண்டு தலைகள் என்பன
**அ) ஆணும் பெண்ணும்** ஆ) அறிவும் அழகும்
இ) வாழ்வும் தாழ்வும் ஈ) பிறப்பும் இறப்பும்

15. தமிழ்ப் பள்ளிக் கூடங்களில் ----------------- எல்லாம் பயிற்சிப் பெற்று வளர வேண்டும் என்கிறார் பாரதி.
**அ) நவீன கலைகள்** ஆ) விளையாட்டு
இ) பாரம்பரியக் கலைகள் இ) அறிவியல் கல்வி

**தெரிந்து தெளிவோம்**

1. எட்டையபுரம் மன்னர்களின் வரலாறு பற்றிய நூலை வெளியிட்டவர்
**அ) கவிகேசரி சாமி தீட்சிதர்** ஆ) வெங்கடேசுர எட்டப்பர்
இ) இளசை மணி ஈ) பரலி. சு. நெல்லையப்பர்

2. வம்சமணிதீபிகை (1879) என்னும் நூலை வெளியிட்டவர்
அ) வெங்கடேசுர எட்டப்பர் ஆ) இளசை மணி


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com
SHRI KRISHNA ACADEMY

இ) **கவிகேசரி சாமி தீட்சிதர்** ஈ) பரலி. சு. நெல்லையப்பர்

3. வம்சமணி தீபிகை என்னும் நூலைத் திருத்தி வெளியிட ஆசை கொண்ட பாரதி 1919-ல் யாருக்குக் கடிதம் எழுதினார்?
   **அ) வெங்கடேசுர எட்டப்பர்** ஆ) இளசை மணி
   இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) பரலி. சு. நெல்லையப்பர்
4. வம்சமணிதீபிகை நூலின் மூல வடிவம் மறுபதிப்பு 2008-ல் யாரால் வெளியிடப்பட்டது?
   அ) வெங்கடேசுர எட்டப்பர் **ஆ) இளசை மணி**
   இ) கவிகேசரி சாமி தீட்சிதர் ஈ) பரலி. சு. நெல்லையப்பர்

5. வம்சமணி தீபிகை என்னும் நூல் யாரைப் பற்றியது?
   அ) சோழ மன்னர்களின் பரம்பரை வரலாறு
   **ஆ) எட்டையபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு**
   இ) ஆங்கில ஆட்சியாளரின் அடக்குமுறைகளைக் கூறுவது
   ஈ) பாரதியின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது
6. வம்சமணி தீபிகை என்னும் நூலின் பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசை கொண்ட பாரதி 6.8.1919 இல் ஆட்சி செய்த வெங்கடேச எட்டப்பருக்குக் கடிதம் எழுதியவர்
   **அ) பாரதியார்** ஆ) சீனி. விசுவநாதன் இ) இளசைமணி ஈ) கவிகேசரி சாமி தீட்சிதர்
7. பாரதி தனது பதினைந்து வயதில் எட்டயபுரம் அரசருக்கு எழுதிய கவிதைக் கடிதத்தில் வேண்டப்படும் செய்தி
   அ) ஆங்கில அரசை அகற்ற வேண்டி **ஆ) பாரதி கல்வி கற்க உதவி வேண்டி**
   இ) தன் நண்பன் கல்வி கற்க உதவி வேண்டி
   ஈ) எட்டயபுரத்தில் கவியரங்கம் நடத்த வசதி வேண்டி

**தெரியுமா?**

1. பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாபாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர்
   **அ) பரலி.சு.நெல்லையப்பர்** ஆ) ரா. அ. பத்மநாபன்
   இ) டாக்டர். பொற்கோ ஈ) தி. சு. நடராசன்
2. பாரதி நடத்திய சூரியயோதயம், கர்மயோகி, லோகோபகாரி, தேசபக்தன் போன்ற இதழ்களில் துணையாசிரியராகப் பணியாற்றியவர்
   அ) ரா. அ. பத்மநாபன் **ஆ) பரலி சு.நெல்லையப்பர்**
   இ) டாக்டர். பொற்கோ ஈ) தி. சு. நடராசன்
3. பரலி சு.நெல்லையப்பர் ஆசிரியராகப் பணியாற்றிய இதழ்கள்
   அ) சூரியயோதயம், கர்மயோகி ஆ) குயில், தேசபக்தன்
   **இ) லோகோபகாரி, தேசபக்தன்** ஈ) கர்மயோகி, குயில்
4. பரலி நெல்லையப்பர் எழுதிய கவிதை நூல்கள்
   அ) நெல்லைத் தென்றல், சர்ப்பயாகம், அலையும் சுவடும்
   ஆ) ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல்
   இ) இலக்கியச் சிந்தனை, மலையாளக்கவிதை, அலையும் சுவடும்
   **ஈ) நெல்லைத்தென்றல், பாரதிவாழ்த்து, உய்யும் வழி**
5. வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியவர்
   **அ) பரலி.சு.நெல்லையப்பர்** ஆ) ரா. அ. பத்மநாபன்
   இ) டாக்டர். பொற்கோ ஈ) தி. சு. நடராசன்
6. பாரதி நடத்திய இதழ்களில் துணையாசிரியராக இருந்தவர்
   **அ) நெல்லையப்பர்** ஆ) கண்ணதாசன்
   இ) இளசை மணி ஈ) இளசை சுந்தரம்
7. லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு



Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

SHRI KRISHNA ACADEMY

ஆசிரியராகவும் பணியாற்றியவர்
**அ) நெல்லையப்பர்** ஆ) கண்ணதாசன் இ) இளசை மணி ஈ) இளசை சுந்தரம்

## நூல்வெளி

1. பாரதி பதினைந்து வயதில் கல்வி கற்க உதவி வேண்டி யாருக்குக் கவிதைக் கடிதம் எழுதினார்
   அ) குந்தி கேசவர் **ஆ) எட்டயபுர அரசர்** இ) பொற்கோ ஈ) பத்மநாபன்
2. பாரதியார் தன் (கடைசி கடிதம்) மறைவிற்கு முன்னர் யாருக்குக் கடிதம் எழுதினார்.
   **அ) குத்தி கேசவர்** ஆ) எட்டயபுர அரசர் இ) பொற்கோ ஈ) பத்மநாபன்
3. பாரதியாரை விட ஏழாண்டுகள் இளையவர்
   அ) குத்திகேசவர் ஆ) பொற்கோ **இ) பரலி நெல்லையப்பர்** ஈ) பத்மநாபன்
4. "என்னை யான் செய்குவ தின்றமிழ் கற்பினோ
   பின்னை ஒருவரும் பேணார்" – என்ற பாரதியின் கவிதை இடம் பெற்ற கடிதம்
   அ) குத்திகேசவர் **ஆ) எட்டயபுர ஜமீன்**
   இ) பரலி நெல்லையப்பர் ஈ) பத்மநாபன்
5. மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தை பதிப்பித்தவர்
   **அ) ரா.அ. பத்மநாபன்** ஆ) குத்திகேசவர் இ) பரலி நெல்லையப்பர் ஈ) பத்மநாபன்
6. மகாகவி பாரதி நெல்லையப்பருக்கு எழுதிய கடிதம் எந்நூலில் இடம்பெற்றுள்ளது
   அ) நெல்லைத் தென்றல் **ஆ) பாரதி கடிதங்கள்**
   இ) சர்ப்பயாகம் ஈ) அலையும் சுவடும்

## கூடுதல் வினாக்கள் (ஒரு மதிப்பெண் வினாக்கள்)

### இனிக்கும் இலக்கணம்
### தமிழாய் எழுதுவோம்

1. எழுதும்போது வரும் பிழைகளை --------------- வகையாகக் கொள்ளலாம்
   அ) 3 **ஆ) 4** இ) 5 ஈ) 6
2. உயிரெழுத்துக்கள் --------
   அ) 10 **ஆ) 12** இ) 30 ஈ) 18
3. உயிரெழுத்துக்களின் வகை ------------
   **அ) 2** ஆ) 4 இ) 12 ஈ) 18
4. மெய்எழுத்துக்கள் -----------
   அ) 3 **ஆ) 18** இ) 12 ஈ) 30
5. மெய்எழுத்துக்களின் வகை ------------
   **அ) 3** ஆ) 12 இ) 18 ஈ) 30
6. உயிர்மெய்யெழுத்துக்கள் ------------
   அ) 18 ஆ) 126 **இ) 216** ஈ) 247
7. உயிர்மெய்க்குறில் ------------
   **அ) 90** ஆ) 126 இ) 247 ஈ) 216
8. உயிர் மெய் நெடில் ------------
   அ) 90 **ஆ) 126** இ) 247 ஈ) 216
9. தமிழ் எழுத்துகள் மொத்தம் ------------
   அ) 90 ஆ) 246 இ) 216 **ஈ) 247**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

SHRI KRISHNA ACADEMY

10. ங, ண, ன, ந, ர, ல, ள, ழ இவ்வெட்டு எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வரும் எழுத்து -------

அ) ர ஆ) ல **இ) ந** ஈ) ற

11. சொல்லின் இறுதியில் வராத எழுத்தைக் கண்டறி

அ) ர ஆ) ல இ) ந **ஈ) ற**

12. ---------- சொல்லின் தொடக்கமாக மெய்யெழுத்துகள் வருவதில்லை

அ) வடமொழியில் **ஆ) தமிழில்** இ) ஆங்கிலத்தில் ஈ) தெலுங்கு

13. க்ரீடம், ப்ரியா -என்பவை எம்மொழிச் சொற்கள்

**அ) வடமொழி** ஆ) அரபு இ) தமிழில் ஈ) தெலுங்கு

14. ட், ற் என்னும் மெய்களுக்குப் பிறகு அவ்வெழுத்து வரிசைகளும் ------------- என்னும் வரிசையே வரும்

**அ) க, ச, ப** ஆ) ன, ண, ந இ) ர, ற ஈ) ப, ம, ய

15. சரியான கூற்றினைக் கண்டறிக

i) வல்லின மெய்கள் ஈரொற்றாய் வாரா

ii) ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை

iii) க், ச், த், ப் ஆகியவற்றின் பின் அவற்றின் அவ்வெழுத்து வரிசைகளே வரும்

அ) i, ii சரி ஆ) ii, iii சரி இ) i, iii சரி **ஈ) மூன்றும் சரி**

16. சொல்லின் முதலில் வராத எழுத்துகள்

**அ) ட, ற** ஆ) த, ந இ) ப, ம ஈ) க, ச

17. ஆய்த எழுத்து சொல்லின் ------------ வரும்

அ) முதலில் **ஆ) இடையில்** இ) கடைசியில் ஈ) ஈற்றில்

18. மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வருபவை

அ) ங, ஞ ஆ) ங, ம இ) ண, ன **ஈ) ந, ம**

19. ----------- என்னும் எழுத்துகளுக்குப் பின் வியங்கோள் வினைமுற்றுகள் விகுதி வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும்

**அ) ய், ர், ல், ழ், ள்** ஆ) ற், ட் இ) ங், ஞ், ண், ர், ம் ஈ) க், ச், ட், த், ப்

20. ---------------- ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும்

i) ய ii) ர iii) ழ

**அ) மூன்றும் சரி** ஆ) மூன்றும் தவறு இ) i, iii சரி ஈ) i, ii சரி

20. தனிக்குறிலை அடுத்து ------------ ஒற்றுகள் வாரா

அ) க, ச **ஆ) ர, ழ** இ) த, ப ஈ) க, ப

21. லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம்வரின் லகரம் -------------- திரிவதுண்டு

**அ) னகரமாய்த்** ஆ) ணகரமாய்த் இ) டகரமாய்த் ஈ) மகரமாய்த்

22. ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம்வரின் ளகரம் ----------- திரிவதுண்டு

அ) னகரமாய்த் ஆ) ணகரமாய்த் **இ) டகரமாய்த்** ஈ) றகரமாய்த்

23. ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம்வரின் ளகரம் ----------- திரிவதுண்டு

அ) னகரமாய்த் **ஆ) ணகரமாய்த்** இ) டகரமாய்த் ஈ) றகரமாய்த்

24. சரியானவற்றைக் கண்டறி

i) இயக்குநர் ii) இயக்குனர் iii) உறுப்பினர் iv) வீட்டினர்

அ) i) சரி ஆ) ii) iii) சரி இ) iv) சரி **ஈ) ii) மட்டும் தவறு**

25. வேற்றுமைப் புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் எவ்வாறு திரியும்

அ) இயல்பாகப் புணரும் ஆ) லகரம் டகரமாகும்

இ) லகரம் னகரமாகும் **ஈ) லகரம் றகரமாகும்.**

SHRI KRISHNA ACADEMY

26. வேற்றுமைப் புணர்ச்சியில் ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் எவ்வாறு திரியும்
அ) ளகரம் லகரமாகும் ஆ) ளகரம் னகரமாகும்
இ) ளகரம் டகரமாகும் **ஈ) இவற்றில் எதுவுமில்லை**
27. தமிழ்ச்சொல் ----------------- மெய்யோடு முடியாது.
**அ) வல்லின** ஆ) மெல்லின இ) இடையின ஈ) உயிர்
28. சொல்லின் இறுதியில் வராத மெய்யெழுத்து
அ) ழகர மெய் ஆ) நகரமெய் **இ) றகரமெய்** ஈ) ணகரமெய்
29. வல்லின மெய்களில் ஈரொற்றாய் வராத எழுத்துகள்
அ) க், ச் ஆ) த், ப் இ) ச், ட் **ஈ) ட், ற்**
30. கருத்து 1: ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்
கருத்து 2: தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்து வரும்.
அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி
**இ) இரண்டு கருத்துகளும் சரி** ஈ) கருத்து 1 சரி, 2 தவறு
31. மெல்லின எழுத்துகளில் சொல்லின் தொடக்கமாக வராத எழுத்துகள்
**அ) ண, ன** ஆ) ங, ஞ இ) ம, ந ஈ) ங, ண
32. பல் + நூல் என்பது எவ்வாறு புணரும்?
அ) பல்நூல் ஆ) பலநூல் இ) பந்நூல் **ஈ) பன்னூல்**
33. பல் + துளி என்பது எவ்வாறு புணரும்?
**அ) பஃறுளி** ஆ) பல்துளி இ) பல்றுளி ஈ) பலதுளி
34. அல் + திணை என்பது எவ்வாறு புணரும்?
அ) அல்திணை **ஆ) அஃறிணை** இ) அல்றிணை ஈ) அஃதிணை
35. சொல் + துணை என்பது எவ்வாறு புணரும்?
**அ) சொற்றுணை** அ) சொல்துணை இ) சொஃறிணை ஈ) சொல்திணை
36. நாள் + மீன் என்பது எவ்வாறு புணரும்?
**அ) நாண்மீன்** ஆ) நாள்மீன் இ) நாண்மீள் ஈ) நாளீன்
37. மக்கள் + பேறு என்பது எவ்வாறு புணரும்?
அ) மக்கள்பேறு **ஆ) மக்கட்பேறு** இ) மக்கப்பேறு ஈ) மக்கள்போறு
38. பல் + முகம் என்பது எவ்வாறு புணரும்?
அ) பலமுகம் ஆ) பல்முகம் **இ) பன்முகம்** ஈ) பலஅகம்
39. கடல் + கரை என்பது எவ்வாறு புணரும்?
**அ) கடற்கரை** ஆ) கடல்கரை இ) கடலகரை ஈ) கடறகரை
40. வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரம் எவ்வாறு மாறும்
**அ) தகரமும் றகரமாக மாறும்** ஆ) தகரமும் லகரமாக மாறும்
இ) தகரமும் டகரமாக மாறும் ஈ) தகரமும் தகரமாக மாறும்
41. வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரம் எவ்வாறு மாறும்
**அ) நகரமும் னகரமாக மாறும்** ஆ) நகரமும் லகரமாக மாறும்
இ) நகரமும் டகரமாக மாறும் ஈ) நகரமும் தகரமாக மாறும்
42. அல்வழிப்புணர்ச்சியில் தனிக்குறிலை அடுத்த லகரம் தகரம் வரும் போது எவ்வாறு மாறும்
**அ) லகரம் ஆய்தமாக மாறும்** ஆ) தகரமும் லகரமாக மாறும்
இ) தகரமும் டகரமாக மாறும் ஈ) தகரமும் றகரமாக மாறும்
43. சரியானவற்றைக் கண்டறிக
1. ஓட்டுநர் 2. அனுப்புநர் 3. பெறுநர் 4. குழுவினர்
அ) 1, 2, 4 சரி ஆ) 1, 3, 4 சரி இ) 2, 3, 4 சரி **ஈ) அனைத்தும் சரி**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

## கூடுதல் வினாக்கள் (இரண்டு மதிப்பெண் வினாக்கள்)

1. **சொல்லில் ஆய்த எழுத்தின் நிலை குறித்தெழுதுக**
   - ❖ ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்
   - ❖ தனிச்சொல்லாயின் மூவெழுத்தாகவும், தனிக்குறிலை அடுத்தும் வரும்.
   - ❖ சான்று: அ.்.து, எ.்.கு, க.்.சு
2. **தனிக்குறிலை அடுத்து ரகரம் வரின் எவ்வாறு எழுத வேண்டும்?**
   - ❖ தனிக்குறிலை அடுத்து ரகரம் வரின் அதனைத் தமிழ் இயல்புக்கேற்ப திருத்தி எழுத வேண்டும்.
   - ❖ சான்று: நிர்வாகம் - நிருவாகம், கர்மம் - கருமம்.
3. **எழுத்துப்பிழைகள் ஏற்படக் காரணங்கள் யாவை?**
   - ❖ குறில், நெடில் வேறுபாடு அறியாதிருப்பது
   - ❖ எழுத்துககள் வரும் முறையில் தெளிவற்றிருப்பதும்
   - ❖ பேசுவதைப் போலவே எழுத எண்ணுவதுமே பிழைகள் ஏற்படக் காரணமாக உள்ளன.
4. **எழுத்துப்பிழைகளைத் தவிர்க்க வேண்டிய முறையை விளக்குக.**
   - ❖ எழுத்துகளின் ஒலிப்புமுறை, அவற்றுக்கான வரிவடிவ வேறுபாடு, அவை சொல்லில் வரும் இடங்களையும்(முதல், இடை, கடை) தெள்ளத்தெளிவாய் மனத்துள் பதித்துக் கொள்வதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.
5. **ஈரொற்றாய் வராத வல்லின மெய்கள் யாவை?**
   - ❖ ட், ற் என்னும் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை.
6. **சொல்லின் முதலில் வராத வல்லின எழுத்துகள் யாவை?**
   - ❖ சொல்லின் முதலில் வராத எழுத்துகள் ட,ற ஆகும்.
   - ❖ அவை சொல்லின் முதலில் வந்தால் அவை தமிழ்ச் சொற்களாகா.
7. **மெல்லின மெய்களில் சொல்லின் முதலில் வராதவை எவை?**
   - ❖ சொல்லின் முதலில் வராத மெல்லின எழுத்துகள் ண, ன ஆகும்.
8. **இடையின எழுத்துகளுக்குப் பின் இடம்பெறுவன யாவை?**
   - ❖ ய், ர், ல், ழ், ள் என்னும் எழுத்துகளுக்குப் பின் வியங்கோள்/ வினைமுற்று/ கள்/ விகுதி/ வல்லினத்தில் தொடங்கும் சொற்கள் வரும்போது இயல்பாய் நிற்கும்.
   - ❖ சான்று: நாய்கள், தாய்சேய், ஊர்க, ஊர்சூழ், வாழ்க, கால்கள், தோள்கள்
9. **மெய்யெழுத்துகளில் ஈரொற்றாய் வரும் எழுத்துகள் யாவை? சான்று தருக.**
   - ❖ ய, ர, ழ ஒற்றுகள் மட்டுமே ஈரொற்றாய் வரும். மற்றவை அளபெடுத்தால் மட்டுமே வரும்.
   - ❖ சான்று: பாய்ச்சு, பார்க்கும், வாழ்க்கை
10. **தொடரில் ஒரு, இரு என்னும் சொற்களின் பின் உயிர்வரின் எவ்வாறு மாறும்?**
    - ❖ உயிர்வரின் ஒரு, இரு என்னும் சொற்கள் ஓர், ஈர் என்றும் மாறும்.
11. **தொடரில் அது, இது, எது என்னும் சொற்களின் பின் உயிர்வரின் எவ்வாறு மாறும்?**
    - ❖ உயிர்வரின் அது, இது, எது என்பன முறையே அ.்.து, இ.்.து, எ.்.து என்பனவாக மாறும்
12. **தனிக்குறிலை அடுத்து வராத ஒற்று எழுத்துகள் எவை?**
    - ❖ தனிக்குறிலை அடுத்து வராத ஒற்று எழுத்துகள் ரகர, ழகரங்களாகும்.

SHRI KRISHNA ACADEMY

## மனப்பாடப் பாடல்

### இயல் - 1

### தன்னேர் இலாத தமிழ்

### தண்டியலங்கார உரை மேற்கோள் பாடல்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

**- தண்டி**

**பா வகை: நேரிசை வெண்பா**

### இயல் - 2

### நெடுநல்வாடை (PTA - 3)

வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க.

**- நக்கீரர்**

**பா வகை: நேரிசை ஆசிரியப்பா**

### இயல் - 3

### கம்பராமாயணம்

**(PTA - 1)**

துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

**- கம்பர்**

**பா வகை: கலி விருத்தம்**

குகனொடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

**- கம்பர்**

**பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.**

## திருக்குறள்
### இல்வாழ்க்கை

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

### செய்ந்நன்றி அறிதல்

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது **(PTA - 2)**
அன்றே மறப்பது நன்று.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை **(PTA - 4,6)**
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

### வெஃகாமை

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

### வெகுளாமை

மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

### ஊழ்

நுண்ணிய நூற்பல கற்பினும் மற்றும்தன் **(PTA - 5)**
உண்மை அறிவே மிகும்.

**பா வகை: குறள் வெண்பா**

### இயல் - 4
### இதில் வெற்றி பெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

- சுரதா

பா வகை: எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

**புறநானூறு**

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

- ஔவையார்

**பா வகை: நேரிசை ஆசிரியப்பா**

**இயல் - 5**

**தெய்வமணிமாலை (PTA - 2)**

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

- இராமலிங்க அடிகள்

**பா வகை: பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

**இயல் - 6**

**சிலப்பதிகாரம் - புகார்க்காண்டம்**

**அரங்கேற்று காதை (PTA - 5)**

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை.

- இளங்கோவடிகள்

**பா வகை: ஆசிரியப்பா**

**திருக்குறள்**

**அறிவு உடைமை**

அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் **(PTA - 1,3)**
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை



SHRI KRISHNA ACADEMY

அதிர வருவதோர் நோய்.

**சிற்றினம் சேராமை**

நல்லினத்தின் ஊங்குந் துணையில்லை; தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.

**வினைத்திட்பம்**

வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

**தூது**

கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

**உட்பகை**

வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

**கள் உண்ணாமை**

பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

**பா வகை: குறள் வெண்பா**

**இயல் - 7**

**புறநானூறு**

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

**- பிசிராந்தையார்**

**பா வகை: நேரிசை ஆசிரியப்பா**

**இயல் - 8**

**இரட்சணிய யாத்திரிகம் (PTA - 4,6)**

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி.

**- எச்.ஏ.கிருட்டிணனார்**

**பா வகை: அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்**

**சிறுபாணாற்றுப்படை**

----------- என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com

எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனடை நோன்தாள்.

**- நத்தத்தனார்**

**பா வகை: நேரிசை ஆசிரியப்பா**

SHRI KRISHNA ACADEMY
Padasalai.Net

# SHRI KRISHNA ACADEMY

We are happy to inform you that Shri Krishna Academy is ready to offer a sound package of study guidance for the students to excel in Public Examination. We have been contributing our service in Namakkal for the past 20 years in various disciplines like BOARD EXAMINATIONS & NEET/ JEE, and other competitive examinations with strenuous faculties.

- **QUESTION PAPERS:**

  (Based on New syllabus, New Text book 2019-2020

  - Knowledge
  - Understanding
  - Application
  - Skill

- **FULL TEST QUESTION PAPERS:**

  CREATIVE QUESTIONS, ONE MARK TEST QUESTION PAPER for X, XI, XII AVAILABLE FOR ALL SUBJECTS.

- **MATERIALS:**

  STUDY MATERIALS AVAILABLE :
  KG, V-VIII, X,XI,&XII (FOR ALL SUBJECTS)
  TOPPERS GUIDE (FOR ALL SUBJECTS)

- **MINIMUM MATERIALS FOR LATE BLOOMERS**

  X,XI,&XII (FOR ALL SUBJECTS)

- **NEET MATERIALS WITH SOLUTION BASED ON NCERT SYLLABUS**

  STUDY MATERIALS AVAILABLE FOR BOTH TAMIL & ENGLISH MEDIUM
  17 YEARS MODEL QUESTION PAPERS
  NEET COACHING FACULTIES – 25 YEARS EXPERIENCED GOVT STAFF

In this proposal, we have given you an outline of all service providing by Shri Krishna Academy. Hope we will get a favourable reply from your institution.

Thanking you.

→ **For MORE DETAILS - 99655 31727, 94432 31727**


Send Your Question Papers & Answer Keys to Our E-mail ID: Padasalai.Net@gmail.com